# உதயன்

சுடர் : 36 | கதிர் : 233 | சனிக்கிழமை | ஆடி 1 ஆம் நாள் 17 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## 41 பேர் சாவு தொற்று 1,517

கொழும்பு, ஜூலை 17
இலங்கையில் மேலும் 41 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று அரசு தகவல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரி

19

# தடுப்பூசி ஒதுக்கீட்டில் யாழுக்கு மீள ஏமாற்றம்

### வடக்கின் திட்டமிடலுக்கு கொழும்பு அரசு இடையூறு

யாழ்ப்பாணம், ஜூலை 17
கடந்த வாரம் இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற 20 லட்சம் சைனோபோர்ம் தடுப்பூசிகளில் 50 ஆயிரம் தடுப்பூசிகள் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வழங்கப்படும் என்று கொழும்பு சுகாதார அமைச்சு அதிகாரிகளால் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு உறுதியளிக்கப்பட்டபோதும் இறுதி நேரத்தில் அது வழங்கப்படவில்லை.

19

## வல்வெட்டித்துறையில் 7 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 17
வல்வெட்டித்துறை ஊரிக்காடு நாவலடி கெருடாவில் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 7 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறி

19

### இறக்குமதியாளர் விவரம் இல்லாத

## சருமப்பூச்சு விற்பனை வியாபாரிகள் மீது வழக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாண மாவட்டத்தில், ஒன்லைன் மூலமான இறக்குமதியாளர் விவரம் குறிப்பிடப்படாத சருமப்பூச்சு வகைகளை காட்சிப்படுத்தி விற்பனை செய்த வியாபார நிலையங்கள் மீது கள ஆய்வுமேற்கொள்ளப்பட்டதோடு, வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டுள்ளது.

15

## இறந்த குழந்தைக்கு தொற்று உறுதி

### யாழில் முதல் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 17
சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 மாதக் கைக்குழந்தை ஒன்று உயிரிழந்த நிலையில், அந்

19

## கொரோனா தொற்றால் 10 குழந்தைகள் சாவு

கொழும்பு, ஜூலை 17
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில், இதுவரை 10 குழந்தைகள், பொரளை சீமாட்டி மருத்துவமனையில் உயிரிழந்துள்ளனர் என்று மருத்துவ

16

### பரு. வர்த்தக தொகுதியில்

## 14 பேருக்கு தொற்று 6 பேர் தலைமறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 17
பருத்தித்துறை நகர் வர்த்தக தொகுதியில் மேலும் 14 பேருக்கு தொற்று உள்ளமை நேற்றைய பரிசோதனைகளில் கண்டறியப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 6 பேரையும் அவர்களுடன் தொடர்புடையவர்களையும் காணவில்லை அல்லது தலைமறைவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

18

## ஸ்டாலின், நாகமுவ குழுவினர் தடுப்பிலிருந்து விடுதலை

கொழும்பு, ஜூலை 17
ஆசிரிய தொழிற்சங்கங்களின் அரசுக்கு எதிரான தொடர் போராட்டத்தையடுத்து கேப்பாப்பிலவு விமானப்படை முகாமில் வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 16 பேர் தனிமைப்படுத்தலிலிருந்து நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர். அவ்

18

## வட்டக்கச்சியிலும் 11 பேருக்கு தொற்று

தருமபுரம், ஜூலை 17
வட்டக்கச்சி கட்சன் வீதியில் 4 நாள்களில் மாத்திரம் 14பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்றும் 11 பேர் தொற்றா

19

## இளைஞர்களிடம் ஒழுக்கக்கேடு; தேவை தலைமைத்துவ பயிற்சியே

*அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்து*



கொழும்பு, ஜூலை 17
"ஒழுக்கமுள்ள சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டுமெனில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இராணுவ முகாமுக்குள் பயிற்சியளிக்கப்பட வேண்டும்"என்று பொது

19

## விடுதலையான கையோடு உரிமைமீறல் மனு தாக்கல்

கொழும்பு, ஜூ 17
தனிமைப்படுத்தல் விதிமுறைகளைப் பயன்படுத்தி போராட்டங்களைத் தடுக்க பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகள் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றன என்று அறிவிக்கக்கோரி

20

## கல்வி அதிகாரிகளை திருப்பி அனுப்பிய படைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17
கிளிநொச்சி பூநகரி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட இரணைதீவு பாடசாலையை புனரமைக்கும் பொருட்டு ஆரம்பகட்ட பணிகளை மேற்கொள்வதற்காக சென்ற குழுவினரை கடற்படையினர், அனுமதி மறுத்து திருப்பி அனுப்பியுள்ளனர்.

19

## போதைக்கு அடிமையான இருவருக்கு புனர்வாழ்வு

### பெற்றோரின் கோரிக்கையையும் ஏற்று யாழ்.நீதிமன்று தீர்ப்பளித்தது

யாழ்ப்பாணம், ஜூலை 17
போதைப்பொருளுக்கு அடிமையாகிய சகோதரர்கள் இருவரை ஒரு வருட மறு

19

## 500 பனைகள் தறிக்கப்பட்டு கடல் வழியாகக் கடத்தல்

### ஆளுநரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கில் இடம்பெற்று வரும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் திருமதி வாசுகி

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றாளர்களுக்கு வெற்றியளிக்கிறது ஆயுள்வேத சிகிச்சை



கொழும்பு, ஜூலை 17

**ஆயுள்வேத மத்திய நிலையங்களில் கொரோனா நோயாளிகளுக்கு வெற்றிகரமாக சிகிச்சையளிக்க முடிந்துள்ளதாக, சுதேச மருத்துவத்துறை ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார். மேலும் இங்கு சிகிச்சைப் பெற்ற எவரும் உயிரிழக்கவில்லை என்பதுடன், விரைவாகக் குணமடைந்திருப்பது பற்றிய விசேட ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாக அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்துள்ளார்.**

தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில், கொவிட் தடுப்பு விசேட குழுவுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே, மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நோய்வாய்ப்பட்டு, வீடுகளைவிட்டு வெளிச்செல்ல முடியாதிருப்பவர்களுக்கு, நடமாடும் தடுப்பூசி ஏற்றும் சேவையை விரைவாக ஆரம்பிக்குமாறு, ஜனாதிபதி கோத்தாபய உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

நாடளாவிய ரீதியில், மாவட்ட மட்டத்தில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் விரைவு படுத்தப்பட்டுள்ளன. எனினும், நோய்வாய்பட்டு, வீடுகளை விட்டு வெளிச்செல்ல முடியாதிருப்பவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றுவது சிக்கலாக உள்ளது. சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் அல்லது விசேட தொலைபேசி இலக்கங்களின் ஊடாகத் தகவல்களைப் பெற்று, நடமாடும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை விரைவாக ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை, ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கடந்த சில நாள்களாக இனங்காணப்பட்டுள்ள கொவிட் நோயாளிகள் மற்றும் உயிரிழந்தவர்களில் அதிக சதவீதமானோர், தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது. எனவே, தடுப்பூசி ஏற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் அது தொடர்பில் அறிவூட்டுவது குறித்தும், தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு மக்களை உட்படுத்துவதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ள 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், எதிர்வரும் நான்கு நாள்களுக்குள் தடுப்பூசி ஏற்ற முடியுமென, அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க மற்றும் ரோஹித்த அபேகுணவர்தன ஆகியோர் எடுத்துரைத்தனர்.

முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய வலயங்களில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள், 90 சதவீதமளவில் நிறைவடைந்துள்ளன. எனவே, குறித்த துறைகளில் விசேடமான எழுச்சியைக் காண முடியுமென, அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

எந்தவொரு துறையிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவருக்குத் தடுப்பூசி ஏற்றும் எந்தவோர் இடத்திலும், இலகுவாகத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு, ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்காக, சுதேச ஔடதங்களை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார், என்றுள்ளது.

(ஒ.இ)



# இராணுவ ஆட்சியின் ஊடாக சிவில் நிர்வாகத்தை சிதைக்காதீர்!

*ஜனாதிபதி செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் கை அசைத்துச் சென்ற ஜனாதிபதி*

கொழும்பு, ஜூலை 17

இராணுவ ஆட்சியின் ஊடாக சிவில் நிர்வாகத்தை ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது.

இலவச கல்விக்கு எதிராக அரசு முன்னெடுத்துள்ள செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்குரிய மனு கையளிக்கப்பட்டது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள இலங்கை ஆசிரிய சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட சிவில் அமைப்பினரை விடுதலைசெய்யுமாறு வலியுறுத்தி 17 தொழிற்சங்கத்தினர் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் ஆசிரியர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசு விரைவில் தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்பதை வலியுறுத்தி போராட்டகாரர்கள் ஜனாதிபதி செயலாளரிடம் மனு ஒன்றை கையளித்தார்கள்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தையடுத்து, ஜனாதிபதி செயலகத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளே செல்லாதவாறு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகத் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் காரில் சென்ற ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பார்த்து கையசைத்தவாறு சென்றார்.

(த-22)

# ஆளும் கட்சியின் விசேட கூட்டம்

கொழும்பு, ஜூலை 17

ஆளுங்கட்சியின் விசேட நாடாளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெறும் இக்கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை மறுதினம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 20ஆம் திகதி மாலை வாக்கெடுப்புக்கு விடப்பட வுள்ளது. எனவே, இதன்போது ஆளுங்கட்சியிலுள்ள அனைவரும் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் மேற்படி கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், அரச கூட்டணியில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இச்சந்திப்பில் விரிவாக கலந்துரையாடி முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (ஒ.44)

# சிற்றாலயச் சொரூபங்கள் மீது தாக்கு; மன்னாருக்கு சென்றார் கவிந்த எம்.பி

மன்னார், ஜூலை 17



மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள 6 இடங்களில் அமைந்துள்ள கத்தோலிக்க ஆலயம் மற்றும் சிற்றாலயச் சொரூபங்கள் மீது கடந்த சில தினங்களாக தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்தன நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னாருக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தார்.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்துக்குச் சென்று ஆலய பங்குத்தந்தை, அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசத்தைச் சந்தித்த அவர், கடந்த திங்கள்,செவ்வாய்,புதன் ஆகிய மூன்று தினங்களிலும் அதிகாலை நேரம் மன்னார் பகுதியில் அமைந்துள்ள 6 கத்தோலிக்க ஆலயம் மற்றும் சிற்றாலய சொரூபங்கள் மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களையும், ஏற்பட்ட சேதத்தையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அடையாளம் கண்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்த விடயம் உரிய பொலிஸ் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்தன இதன் போது தெரிவித்துள்ளார்.

(ப-56)

# ஆட்சியைக் கவிழ்க்கவே நாட்டில் போராட்ட அலை

***பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குற்றச்சாட்டு***

அரசின் வேலைத்திட்டங்களைக் குழப்பி ஆட்சியைக் கவிழ்க்கும் குறுகிய நோக்கத்தின் அடிப்படையிலேயே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். பானதுறை பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது உருவாகியுள்ள போராட்ட அலையானது, மக்களுக்கான நலன்புரி விடயங்களை அடிப்படையாகக்கொண்டது அல்ல. மாறாக அரசின் வேலைத்திட்டங்களைக் குழப்பி, ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான நடவடிக்கையாகும்.

போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஜனநாயக உரிமை அதனை முன்னெடுப்பவர்களுக்கு இருப்பதால் இதுவரை காலமும் பொலிஸார் அவற்றை பார்த்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் போராட்டங்கள் மற்றும் கூட்டங்களுக்கு தடைவிதிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து எமக்கு தெளிவானதொரு பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதற்கமையவே பொலிஸார் சென்று அன்று போராட்டத்தை நிறுத்தினர். பொலிஸாரின் தேவைக்காக அவர்களை தனிமைப்படுத்தலுக்கு கொண்டுசெல்லவில்லை. பொதுசுகாதார பரிசோதகர்கள் உத்தியோகப்பூர்வமாக முன்வைத்த கோரிக்கையின் பிரகாரமே தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டனர், என்றார்.

(ஒ.44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோசப் ஸ்டாலினை விடுவிக்குமாறு ஆசிரியர் சங்கம் நேற்று போராட்டம்

**யாழ்ப்பாணம், ஜூலை 17**

**இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி யாழ்ப்பாணம் பஸ் நிலையம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**




இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் 11 மணிவரையான ஒரு மணி நேரம் இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோரின் சட்டவிரோத கைது, கல்வியில் இராணுவமயமாக்கல், கல்வியை தனியார் மயப்படுத்தல், அடக்குமுறைகளை நிறுத்து, தனிமைப்படுத்தல் சட்டத்தை அடக்குமுறைகளுக்கு பாவிக்காதே, அடக்குமுறைகளுக்கு, அடாவடிகளுக்கு ஆயுதத்துக்கு, கைதுகளுக்கு ஆசிரியர் நாங்கள் அடிபணிய மாட்டோம், இலவச கல்வியில் இராணுவம் எதற்கு, கொத்தலாவ சட்ட வரைபை கிழித்தெறி, இலவசக் கல்வியை வியாபாரமாக்காதே உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கோஷங்களை எழுப்பினர். மேலும் இந்த அரசின் அடக்குமுறை மற்றும் சர்வாதிகாரப்போக்குக்கு எதிராக அனைவரும் ஓரணியில் திரண்டு தமது எதிர்ப்பை வெளியிட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர். (ப-26)



# குளவிக்கொட்டுக்கு இலக்காகி மாணவர்கள் மருத்துவமனையில்

*கற்றலுக்காகச் சென்ற நிலையில் சம்பவம்*

முல்லைத்தீவு, ஜூலை 17

புதுக்குடியிருப்பு பாரதி மாகவித்தியாலயத்தில் கற்றலுக்காகச் சென்ற மாணவர்கள் 24 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பா்ரதி மாகாவித்தியாலயத்தில் கற்றல் மத்திய நிலையத்தில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட விசுவமடு பாரதி மகாவித்தியாலயத்தின் கற்றல் மத்திய நிலையத்தில் கற்றல் செயற்பாட்டுக்காகச் சென்ற மாண்வர்கள் மீதே குளவி கொட்டியுள்ளது. பாதிக்கப்பட்ட 24 பாடசாலை மாணவர்கள் மூங்கிலாறு பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 8 பேர் மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். குறித்த கிராமங்களில் தொலைத்தொடர்பு சிக்னல் இல்லாத நிலையில் மாணவர்கள் இணைய வழிக் கல்வியை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக கற்றல் மத்திய நிலையமாக பாரதி மாகாவித்தியாலயத்தின் கற்றல் மத்திய நிலையம் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-19)





# மன்னாரில் ஆசிரியர்களுக்கும் செலுத்தப்பட்டது பைசர் தடுப்பூசி

மன்னார், ஜூலை 17

மன்னார் மாவட்டத்தில் மன்னார் மற்றும் மடு வலயக் கல்விப் பணிமனைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்றுக் காலை மன்னார் சித்திவிநாயகர் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மன்னார் நகர் பிரதேச செயலகம் மற்றும் மன்னார் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை ஆகியவை இணைந்து தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் கல்வி கற்பிக்கும் மன்னார் மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகவும் அதே நேரம் மன்னார் மாவட்ட கல்வி வலயங்களில் கல்வி கற்பிக்கின்ற ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் நேற்று விசேடமாக 'பைசர்' தடுப்பூசி செலுத்தப்பட்டதுடன், 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் நேற்று இறுதிக் கட்ட தடுப்பூசி செலுத்தப்பட்டது. (ப-56)

# கிராம அலுவலர்மீது வவுனியாவில் தாக்கு

*சந்தேகநபர் கைது*

வவுனியா, ஜூலை 17

வவுனியா தாண்டிக்குளம் பிரிவு கிராம அலுவலர் மீது நபர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார். குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் மகாறம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

வவுனியா தாண்டிக்குளம் ஏ9 வீதியின் கரையில் அரசுக்குச் சொந்தமான காணியில் சில நபர்கள் சுற்றுவேலி அமைத்து,வியாபார நிலையங்களையும் அமைத்திருந்தனர். குறித்த விடயம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய கடந்த 9 ஆம் திகதி அப்பகுதிக்குச் சென்ற வவுனியா பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவினர் அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற வியாபார நிலையங்களை அகற்றியிருந்தனர்.

குறித்த சம்பவத்தை சுட்டிக்காட்டியே தாண்டிக்குளம் பிரிவு கிராம அலுவலர்மீது குறித்த நபர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக கிராம அலுவலரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். (ப-110)

## ஆண் சடலமாக மீட்பு


முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் ஆணொருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான முறிகண்டி செல்வபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலேயே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. 154ஆம் கட்டை ஏ9 வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் உரிமையாளரான குஞ்சுமோகன் அசோகன் (வயது 60) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த வீட்டில் துர்நாற்றம் வீசுவது தொடர்பில் அயலவர்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. குறித்த தகவலுக்கு அமைய பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டனர். சடலமாக மீட்கப்பட்டவரின் மனைவி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும், பிள்ளைகள் தொழிலின் நிமித்தம் வேறு பிரதேசத்தில் வசிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-6)

# சட்டவிரோத கடற்தொழில்: முல்லையில் மூவர் கைது



முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவு மாத்தளன் கடற்பரப்பில் சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 3 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மாத்தளன் பகுதியில் கடலில் சட்டத்துக்கு முரணான வகையில் ஒளிபாச்சி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் மாத்தளன் பகுதியைச் சேர்ந்த மூன்று மீனவர்களே கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். நீதிமன்ற விசாரணைகளை அடுத்து, தண்டப்பணம் செலுத்திய பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோசப் ஸ்ராலினை விடுவிக்கும்வரை 'ஒன்லைன்' வகுப்புக்களை நடத்தோம்

## ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை தெரிவிப்பு

**வவுனியா, ஜூலை 17**

**ஜனநாயக முறையிலான ஆர்பாட்டங்களை நசுக்கமுற்படுவதும், பெருந் தொற்றைக் காரணம்காட்டி, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதும், ஜனநாயக விரோத செயற்பாடு, ஜோசப் ஸ்ராலின் விடுதலைசெய்யப் படும்வரை மாணவர்களின் ஒன்லைன் வகுப்புக்களைப் புறக்கணிப்போம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கொத்தலாவல இராணுவ பல்கலைகழகச் சட்டவரைபுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்ற சுற்றுவட்டத்துக்கு அருகே இடம்பெற்ற கல்விசார் ஊழியர்களின் போராட்டத்தில் பங்கேற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் உட்பட பலர் கைதுசெய்யப்பட்டு அன்றையதினமே நீதிமன்றால் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். எனினும் தனிமைப்படுத்தல் சட்டத்தை காரணம்காட்டி தன்னிச்சையான முறையில் ஜோசப் ஸ்ராலின் உட்பட்ட குழுவினர் கட்டாயமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை மிகவும் பாரதூரமான ஜனநாயக மறுப்பு நடவடிக்கையே. இச்செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன், அவர்களை விடுதலை செய்யுமாறும் கோருகிறோம்.

இலங்கையின் அரசமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள தொழிற்சங்க உரிமைகளின் அடிப்படையிலேயே ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. இவற்றை நசுக்க முற்படுவதும், கொரோனா பெருந் தொற்றைக் காரணம்காட்டி, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதும், ஜனநாயக விரோத செயற்பாடாகவே அமைகின்றது. நிர்வாகத்துக்கு இடையூறு இல்லாமல் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமூக நீதிக்காக இடம்பெற்ற இப்போராட்டத்தில் கலந்துகொண்ட ஜோசப் ஸ்ராலின் உட்பட்ட குழுவினரை தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிப்பதோடு தொழிற்சங்கங்களின் ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்க வேண்டும். ஆசிரியர்களாகிய நாம் இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஜோசப் ஸ்ராலின் விடுவிக்கப்படும்வரை மாணவர்களின் ஒன்லைன் வகுப்புக்களைப் புறக்கணிப்போம் - என்றுள்ளது. (ப-110)



# சட்டவிரோத கிரவல் அகழ்வு: கொக்காவிலில் ஐவர் கைது

## கனரக வாகனங்களும் பறிப்பு

கிளிநொச்சி, ஜூலை 17

கொக்காவில் பிரதேசத்தில் சட்டவிரோத கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பகுதி நேற்று முற்றுகையிடப்பட்டு ஐவர் கைதுசெய்யப்பட்டதுடன், 4 கனரக வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வனப்பகுதியிலேயே குறித்த முறையற்ற கிரவல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. குறித்த விடயம் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் மண் அகழ்வாராய்ச்சி தள சட்டப் பிரிவை அமுலாக்கும் அதிகாரிகள் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் குறித்த பகுதி சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. இதன்போது கிரவல் அகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டமைக்கு மாறாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு மேலதிகமாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டமை மற்றும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மாறாக 20 அடிக்கு மேல் அகழ்வு மேற்கொண்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். குறித்த அகழ்வு பணிக்கு பயன்படுத்தப்பட்ட 4 கனரக வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் இயக்குநர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் கிரவல் அகழ்வதற்கு அனுமதி பெற்ற நபரும் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் ஐயன்குளம் பொலிஸார் ஊடாக நீதிமன்றில் வழங்கு தொடரப்படவுள்ளது. (ப-6)



# விவசாய உற்பத்தி களஞ்சிய கட்டடத்துக்கு மன்னாரில் அடிக்கல்

மன்னார், ஜூலை 17

மன்னாரில் உலக வங்கி நிதி உதவியுடன் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை பாதுகாக்கும் களஞ்சியக் கட்டடத்துக்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.

மத்திய கமத்தொழில் அமைச்சால் மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஊடாக கொவிட் 19 அவசர நிலைமைகளின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரியமடு கிழக்குப் பகுதியில் 11.4 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட உள்ள விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களைப் பாதுகாக்கும் குளிரூட்டப்பட்ட களஞ்சிய அறைக்கான அடிக்கல்லே நடப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் நேற்று முன்தினம் அடிக்கல் நட்டார்.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி.ஸ்டான்லி டிமெல், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் என்.கேதீஸ்வரன், மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மகேஸ்வரன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார், மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் ஜனாப்.ஷுகூர், மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான எ.எி.நௌபில் மற்றும் பி.என். லாபிர் ஆகியோருடன் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (ப-213)

## சட்டவிரோதமாக மணல் குவிப்பு

# முல்லையில் அருட்தந்தை ஒருவர் கைதாகி பிணையில் விடுவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவு உப்புமாவெளி பகுதியில் சட்டவிரோத மணல் குவிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் அருட்தந்தை ஒருவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

உப்புமாவெளி பிரதேசத்துக்கு நேரில் சென்ற முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர், திட்டமிடல் பணிப்பாளர், காணி உத்தியோகத்தர்கள், கரைதுறைப்பற்று பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள், குறித்த பகுதி கிராம அலுவலர், புவிச்சரிதவியல் சுரங்கங்கள் அளவைகள் பணியகத்தினர், சுற்றுச் சூழல் திணைக்களத்தினர், கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் ஆகியோர் மணல் அகழ்வு நிலமைகளைப் பார்வையிட்டனர். இதன்போது குறித்த பகுதியில் இடம்பெற்ற மணல் அகழ்வு சட்டவிரோதமானது என்றும் குவிக்கப்பட்டுள்ள மணல் குவியல் எவ்வித அனுமதிகளுமின்றி சட்டவிரோதமாக இடம்பெற்றுள்ளது என்பதையும் அனைவரும் உறுதிப்படுத்தினர்.

இதனை அடுத்து யாழ். ஆயர் இல்லத்துக்குப் பொறுப்பான உப்புமாவெளி பகுதியில் உள்ள அருட்தந்தை கைதுசெய்யப்பட்டார். அவர் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார். வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ப-19)


# மனைவி, பிள்ளைகளை காணவில்லை கணவனால் பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஜூலை 17

வீட்டிலிருந்து புறப்பட்டுச்சென்ற மனைவி, பிள்ளைகள் மீண்டும் வீடு திரும்பவில்லை என அவரது கணவனால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா நகர் இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த கோ.அனுசியா என்ற தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகள் கடந்த 10ஆம் திகதி மாலை வீட்டிலிருந்து சென்ற நிலையில் இதுவரை வீடு திரும்பவில்லை என அவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பெண் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் (074) 024 4932 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-110)





யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பஸ் பயணங்களால் புதிய கொத்தணி?

## சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 17

**மாகாணங்களுக்கு இடையேயான பயணத்தடை ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளதால், கொரோனாத் தொற்று மேலும் பரவும் அபாயம் உள்ளது. அத்துடன் புதிய கொரோனாக் கொத்தணி ஒன்றும் உருவாக வாய்ப்புள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய தெரிவிக்கையில்,

வைரஸை ஒழிக்க முடியாது என்பதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் கொரோனாத் தொற்றிலிருந்து இன்னும் மீளவில்லை. கொரோனாத் தொற்றுடன் தான் வாழும் சகாப்தத்தில் இருக்கிறோம்.

கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை சரியாகப் பின்பற்ற வேண்டும்.

பயணத் தடைகளைத் தளர்த்துவதற்கான முடிவின் தாக்கத்தை எதிர்காலத்தில் அறிய முடியும்.

அத்தியாவசிய சேவைகளின் ஊழியர்களுக்கு மாத்திரம் மாகாணங்களுக்கு இடையே பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக மாகாண எல்லை வரை குறிப்பிட்ட பஸ்ஸில் பொதுமக்கள் பயணம் செய்கின்றனர். பயணத்தைத் தொடர மற்றொரு பஸ்ஸுக்கு பயணிகள் மாற்றப்படுகின்றனர்.

இதனால் கொரோனாத் தொற்று ஒருவரிடம் இருந்து மற்றொரு நபருக்கு பரவும் சாத்தியக் கூறுகள் உள்ளன. புதிய கொத்தணி உருவாகும் அபாயம் உள்ளது.

கொரோனா வைரஸ் இலகுவான முறையில் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவும் அபாயம் உள்ளது. எனவே சில கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த முடியும்- என்றார். (ஒ.4)

## மூதாட்டியின் சங்கிலி அறுப்பு வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை 17


மூதாட்டி ஒருவர் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலி திருடர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. தங்கத்தின் விலை அதிகரித்துள்ள நிலையில் வவுனியா பம்பைமடு பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுளளது.

வீதியால் நடந்துசென்றுகொண்டிருந்த மூதாட்டியை மோட்டார்சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அவரிடம் முகவரி கேட்பதுபோல பாசாங்குசெய்து, அவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை அறுத்துச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ப-110)

## இந்த வருடத்தில் 9,669 பேருக்கு டெங்கு

கொழும்பு.ஜூலை 17



இந்த வருடத்தில் இது வரை 9 ஆயிரத்து 669 டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக கடந்த 6 மாதங்களில் ஏப்ரல் மாதத்தில் ஆயிரத்து 900 பேர் அதிகூடிய தொற்றாளர்களாக பதிவாகியுள்ளனர்.

இதேவேளை இந்த மாதத்தின் கடந்த 14 நாள்களில் மட்டும் 397 டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். அத்துடன் அதிகளவு டெங்குத் தொற்றாளர்களாக 2 ஆயிரத்து 973 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 11 தொற்றாளர்களும், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் 649 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர் என்றும் தொற்றுநோயியல் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

## இலங்கையில் ராஜபக்ச குடும்பத்தையே இராணுவம் கைதுசெய்யும் நிலை வரும்

*கரைதுறைப்பற்று சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு*

முல்லைத்தீவு, ஜூலை 17

தற்போதைய கோத்தாபய அரசு இராணுவத்துக்கு அதிகாரங்களை அள்ளிவழங்குகின்றது. இந்த நிலை நீடித்தால், சகல அதிகாரங்களையும் பெற்றுக்கொண்ட இராணுவத்தினர் ஒருகட்டத்தில் ராஜபக்ச குடும்பத்தையே சிறைக்குள் தள்ளவும் நேரிடலாம். அவ்வாறே பல நாடுகளில் இடம்பெற்றுள்ளன என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் கனகையா தவராசா தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில்;

இலங்கையிலே படிப்படியாக, இராணுவ ஆட்சி ஒன்று உருவாகிக்கொண்டிருக்கின்றது. இதனை மக்கள் அனைவரும் உன்னிப்பாகவும், எச்சரிக்கையுடனும் அவதானிக்கவேண்டும். இந்த இராணுவ ஆட்சி பல நாடுகளிலே ஏற்பட்டு மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை இழந்திருக்கின்றனர். குறிப்பாக உகண்டாவிலே இடிஅமீன் என்கின்ற இராணுவச் சர்வாதிகாரி நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்தார்.

பாக்கிஸ்தானிலே பூட்டோ பிரதம மந்திரியாக இருந்தபோது தன்னுடைய இராணுவத்தை வலுப்படுத்தி இராணுவத்துக்கு அதிக அதிகாரங்களை வழங்கினார். அந்தப் பூட்டோவையே ஜெனரல் ஜாகியாக் கான் என்ற இராணுவத்தளபதி கைதுசெய்து அவருக்கு மரண தண்டனைகூட வழங்கியிருந்தார். மியான்மாரிலே தெரிவுசெய்யப்பட்ட ஆம்சாம் சூகி என்பவரை இராணுவம் கைதுசெய்து தமது கையிலே ஆட்சியை வைத்திருக்கின்றது. இதுபோல இலங்கையிலே ஏற்படப்போகின்றது. தற்போது இலங்கையில் இருக்கின்ற ஆட்சியாளர்கள் தங்களுக்கு பாதுகாப்பு இருக்குமென்றும், தாம் இராணுவ செயலாளராக இருந்ததால் இராணுவம் தமது கையில் இருக்குமெனவும் நினைத்துக்கொண்டு முக்கியமான அதிகாரங்கள் பலவற்றை இராணுவத்தின் கைகளில் வழங்கிக்கொண்டிருக்கின்றனர். குறிப்பாக இந்த கொவிட்-19 தடுப்பூசிபோடும் அதிகாரங்கள் கூட தற்போது இராணுவத்தினரிடமே வழங்கப்பட்டுள்ளது. மக்களுடைய எல்லா விடயங்களும் தற்போது இராணுவமயப்படுத்தப்பட்டுவிட்டது. எதிர்காலத்தில் இந்த நாட்டிலே, தற்போது ஆட்சியிலுள்ள இந்த ராஜபக்ச குடும்பத்தைக்கூட இராணுவம் கைதுசெய்யக்கூடிய நிலை இருக்கின்றது. ஏன்எனில் இராணுவத்துக்கு அதிகளவில் அதிகாரங்களை வழங்கினால் இவ்வாறுதான் இடம்பெறும் - என்றார். (ப-246)

## யாழ். மேல் நீதிமன்ற நடவடிக்கைகளின் கால ஒழுங்கில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வு வரும் ஜூலை 28ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளதால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நடவடிக்கைகளின் கால ஒழுங்கில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் ஜெ.ஜெயரஞ்சன் வெளியிட்டுள்ளார்.

அதனடிப்படையில் ஜூலை 28ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நடவடிக்கைகள் திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமைகளில் நண்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும். அதேபோன்று யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வு திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமைகளில் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் பதிவாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் மீண்டும் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இரண்டு நீதிமன்ற நடவடிக்கைகளில் இவ்வாறு மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. (ப-26)

## இனவாத வன்முறைகளுக்கு எதிராக தமிழரை அணிதிரளுமாறு அழைப்பு

வவுனியா ஜூலை 17

இனவாத வன்முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தருமாறு அருட்தந்தை மா.சத்திவேல் அழைப்பு விடுத்துள்ளார்

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

1983 ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாதத் தாக்குதல் தொடர்பான கலந்துரையாடல் வரும் 20ஆம் திகதி கொழும்பு மருதானை சி.எஸ்.ஆர் மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. மக்கள் அனைவரும் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்வதோடு அதனைத் தொடர்ந்து கொழும்பு லிப்ரன் சுற்று வட்டத்தில் தொடர்ந்து நடக்கும் இனவாத வன்முறைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டதிலும் கலந்துகொண்டு, எமக்கு ஆதரவு தரவேண்டும் - என்றார். (ப-110)

## கல்விச் சீர்திருத்தங்களை எதிர்ப்போர் நவீன யோசனைகளை முன்வைக்கலாம்

### ஜனாதிபதி எதிர்பார்ப்பு

கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளை எதிர்ப்பவர்கள், தங்கள் அரசியல் நோக்கங்களை முன்னெடுப்பதற்குபதிலாக, நவீனகல்விமுறைக்கான யோசனைகளை முன்வைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நூறு வீதம் அரச பல்கலைகழகங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு செயற்பட முடியாது. அதேவேளை தனியார் பல்கலைக்கழகங்களை வர்த்தகமாக முன்னெடுப்பதை எதிர்க்கின்றேன்.

தனியார் பல்கலைக்கழகங்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தை கல்வி அபிவிருத்திக்கு ஒதுக்க வேண்டும்.

பல்கலைக்கழகப் பட்டதாரிகள் பலர் அரச தொழில்வாய்ப்பை எதிர்பார்க்கின்றனர். வேலைவாய்ப்பை வழங்குவதுமாத்திரம் அரசின் பணியில்லை. வேலைவாய்ப்பு உருவாக்கத்துக்கான முழுமையான பொருளாதாரச் சூழ்நிலையை உருவாக்குவது அரசின் பொறுப்பு - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடுகளின் தளர்வு இரு வாரங்களில் தெரியும்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு.ஜூலை 17**

**போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால், டெல்டா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அடுத்த இரண்டு வாரங்களில் அதிகரிக்கக்கூடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**



இது தொடர்பில் சங்கத்தின் ஊடகக் குழு உறுப்பினர் மருத்துவர் ருவான் ஜெயசூரிய தொிவிக்கையில், அடையாளம் காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இலங்கையில் இறப்பு வீதம் இந்தியா போன்ற நாடுகளுக்கு சமமாகக் காணப்படுகின்றது. பொதுமக்கள் தொடர்ந்தும் சமூக விலகலை பின்பற்ற வேண்டும் முக்கவசங்களை அணிய வேண்டும். வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக போக்குவரத்துச் கட்டுப்பாடுகளைத் தொடர வேண்டும். கொரோனாத் தடுப்பூசியின் பலாபலன்கள் உடனடியாக தென்படாது. அதற்கு சில மாதங்கள் எடுக்கும்- என்றார். (ஒ.4)

# இரட்டைவாய்க்கால் - சாலைவீதி பயணிக்க முடியாதவாறு சேதம்

## சீரமைக்குமாறு கரைதுறைப்பற்று சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவு - இரட்டைவாய்க்கால் தொடக்கம் சாலை வரையான சுமார் 13 கிலோமீற்றர் வீதி, நீண்டகாலமாக குண்டும் குழியுமாகச் சீரின்றிக் காணப்படுவதால், அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்று கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இரத்தினகோபால் ஹஜீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இரட்டைவாய்க்கால் தொடக்கம் சாலைவரையான சுமார் 13கிலோமீற்றர் தூரமுடைய இடப்பரப்புக்குள்ளே 450 குடும்பங்களுக்கு மேல் வசிக்கின்றனர்.

இவ்வாறு அங்கு வசிக்கின்ற மக்கள் குறித்த வீதியை தமது அன்றாட விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதுடன், அரச திணைக்களங்களுக்கு செல்வதற்கும், மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதற்கும், மருத்துவமனை மற்றும் வங்கி என்பவற்றில் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுத்தப்படுத்துகின்றனர்.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதி என்னும் திட்டத்துக்குள்ளேயும் இந்த வீதி உள்வாங்கப்படவில்லை என்பது கவலைக்குரியவிடயம். ஒவ்வொரு வருடமும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர், குறித்த வீதியில் நூறு மீற்றர் தூரமளவில் கிரவல் மூலம் செப்னிடுவார்கள்.

பின்னர் மழைக்காலங்களில் அவர்கள் செப்பனிட்ட பகுதியும் சேதத்துக்குள்ளாகிவிடும். இவ் வீதியைப் பயன்படுத்துகின்ற மீனவர்கள், விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். அவசரத்துக்கு மருத்துவமனைக்கு வருவதற்குக்கூட, புதுக்குடியிருப்புச் சென்று சுமார் 25 கிலோமீற்றர் சுற்றியே வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

அதிலும் புதுமாத்தளன் சந்தியில் இருந்து சாலைவரையான வீதி மிகவும் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

எனவே வீதி அபிவிருத்தித் திணைக்களம் தமது கனகரக இயந்திரங்களைப் பயன்படுத்தி, குறித்த வீதியின், குழிகளையாவது நிரப்பி தற்காலிக சீரமைப்பையாவது மேற்கொள்ள வேண்டும். அதற்கு தவிசாளர் எழுத்து மூலம் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு ஓர் கோரிக்கை கடிதத்தை எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (ப-246)

# பாலைப்பழம் பிடுங்கியவர்களின் கத்திகளை பறித்தது திணைக்களம்

## பூநகரி சபையில் கண்டனத் தீர்மானம்

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி ஜெயபுரத்தில் பாலைப் பழம் பிடுங்கியவர்களின் கத்திகளை வனவளத் திணைக்களம் பறித்துச் சென்றமைக்கு பூநகரி பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஏ32 சாலைக்கு அருகில் ஜெயபுரம் பகுதியில் ஜெயபுரம் கிராம மக்கள் பாலைப்பழம் பிடுங்கிக் கொண்டிருந்தபோது அவ் இடத்துக்கு வந்த வனவளத் திணைக்களத்தினர் மக்களை எச்சரித்து அவர்கள் வைத்திருந்த நான்கு கத்திகளை பறித்துச்சென்றுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் காலம் காலமாக கத்திகளால் பாலை மரக் கிளைகள் வெட்டப்பட்டே பாலைப்பழங்கள் பிடுங்கப்படுகின்றன. ஆனால் வனவளத் திணைக்களத்தினர் வறுமை நிலையில் பாலைப்பழம் பிடுங்கிய மக்களின் கத்திகளைப் பறித்துச் சென்றுள்ளது. இந்த நிலையிலேயே பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அப்பாவி மக்களின் கத்திகளை மீண்டும் வழங்குமாறு பூநகரி பிரதேச சபையின் தவிசாளரால் வனவளத் திணைக்களத்துக்கு கடிதம் எழுதுவது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. பாலை மரங்களின் கிளைகளை வெட்டாமல் எவ்வாறு பழங்களைப் பிடுங்குவது என்பது தொடர்பாக வனவளத் திணைக்களம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் சி.சிறிரஞ்சன் சபையில் தெரிவித்திருந்தார். (ப-13)



# வங்கித்துறை நெருக்கடிக்குள்

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு.ஜூலை 17

அமெரிக்க டொலர் பற்றாக் குறையால், இலங்கையின் உள்நாட்டு வங்கித் தொழில் துறை பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்று ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கான அரசின் நடவடிக்கைகள் குறித்து தெளிவான, பொறுப்புணர்வுடன் கூடிய அறிக்கையை அரசு வெளியிட வேண்டும்.

நாட்டின் மக்களே ஒவ்வொரு டொலரையும் திருப்பி செலுத்தப் போகின்றனர் என்பதால் அந்நியச் செலாவணி நெருக்கடி குறித்த அரசின் நிலைப்பாடு கொள்கை மற்றும் எதிர்காலம் குறித்து அறிவதற்கான உரிமை பொதுமக்கள், வர்த்தகர்களுக்கு உள்ளது.

பெற்றோலிய இறக்குமதி உட்பட பல துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக மத்திய வங்கியால் உள்ளூர் நாணயத்தை டொலராக மாற்ற முடியவில்லை இதனால் வங்கித் தொழில்துறை பாதிக்கப்பட்டுள்ளது- என்றார். (ஒ.4)

# அனுமதியற்ற கட்டடப் பிரச்சினையை தீர்க்க நான்கு படிமுறைகளுடன் கூடிய பொறிமுறை

## கரைதுறைப்பற்று பிரதேச சபையில் முன்வைப்பு

முல்லைத்தீவு, ஜூலை 17

அனுமதியற்ற கட்டடங்கள் அமைத்தல், மதில் அமைத்தல், வீதி அகலிப்புச்செய்தல் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நான்கு படிமுறைகளுடன் கூடிய பொறிமுறை ஒன்று கரைதுறைப்பற்று பிரதேசசபையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஜூலை மாதத்துக்கான அமரின் போதே இப்பொறிமுறை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொறிமுறையை தவிசாளர் க.விஜிந்தன் சபையில் முன்வைத்தார். சபை உறுப்பினர்களால் அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தொடர்பில் தவிசாளர் தெரிவிக்கையில்;

அனுமதியற்ற கட்டடங்கள், அனுமதியற்ற மதில்கள், அனுமதியற்ற வீதி அகலிப்புக்கள்தொடர்பாக நான்கு வகையான படிமுறைகளில் நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் எனத் திட்டமிட்டிருக்கின்றோம். முதலாவதாக எமக்கு மேற்குறிப்பிட்ட அனுமதியற்ற விடயங்கள் தொடர்பாக எமக்கு முறைப்பாடுகள் வருகின்றபோது அந்தந்த உபஅலுவலகங்களினுடைய பொறுப்பதிகாரி, அந்தப் பகுதியினுடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வருமானப் பரிசோதகர் மற்றும் சபையினுடைய செயலாளர் ஆகியோர் இதனைப் பார்வையிட்டு அதற்கான முதற்கட்ட நடவடிக்கையை மேற்கொள்வார்கள். இதில் தாங்கள் விரும்புகின்ற பட்சத்தில் வட்டார உறுப்பினர்களையும் உள்ளடக்கிக்கொள்ளலாம். இவ்வாறு நிலைமைகளைப் பார்வையிட்டு தங்களுக்குள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியாத பட்சத்தில், அடுத்த இரண்டாவது கட்ட நடவடிக்கையாக துறைசார்ந்த தொழில்நுட்பக்குழுவிடம் அது பாரப்படுத்தப்படும். அதனைத் தொடர்ந்து மூன்றாவது கட்டமாக இறுதித் தீர்மானத்துக்காக ஏற்கனவே இரண்டு கட்டங்களிலும், உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்பக்குழுவிடம் பெறப்பட்ட அறிக்கைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு தவிசாளரின் தீர்மானம் குறிப்பிடப்படும். நான்காவது நடவடிக்கையாக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இவ்வாறு இந்த பொறிமுறையின் நான்கு கட்டங்களினூடாகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஒரே பார்வையாக ஆவணப்படுத்தப்படும். அதனை எவரும் எச்சந்தர்ப்பத்திலும் பார்வையிடக்கூடிய பொறிமுறையும் உருவாக்கப்படும்- என்றார். (ப-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## டெல்டா நெருங்குகின்றது!

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் டெல்டா வகை கொரோனாத் தொற்றாளர்கள் அவதானிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளில் சில எழுமாற்றாகத் தெரிவுசெய்யப்பட்டு சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையிலேயே டெல்டா வைரஸ் வடக்குக்குள் ஊடுருவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அப்படியெனில், இனி அந்தத் தொற்றாளர்களின் வழித்தடங்கள் தேடப்பட்டு அந்த வலைப்பின்னலின் அடிப்படையில்தான் டெல்டா மேற்கொண்டு பரவியுள்ளதா என்பது தொடர்பில் தெரியவரும். ஆக, இது ஓரிரு தொற்றாளர்களுடன் முடிந்துவிட்ட கதையல்ல. இதன் பின்னால் உள்ள பேராபத்தை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

டெல்டா என்பது கொவிட் 19 வைரஸ் திரிபுகளிலேயே மிக ஆபத்தானது. உலக சுகாதார நிறுவனத்தின் தரப்படுத்தலில் ஆபத்துப் பட்டியலில் முதலிடத்தில் இருப்பது டெல்டாதான். காற்றில் மிதந்து செல்லக்கூடிய தன்மை, பரவுகை, வீரியம் என அனைத்திலும் அபார சக்தி கொண்டது இந்த டெல்டா. கொரோனா முதலாவது அலையை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய இந்தியா, இரண்டாவது அலையில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் மிகப்பெரும் மனிதப் பேரழிவைச் சந்திக்கக் காரணமாக அமைந்தது டெல்டாதான். அவ்வாறான வைரஸின் பரவுகை இலங்கையில், குறிப்பாக வடக்கில் நிகழுமாக இருந்தால் அதன் விளைவுகள் நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத அளவுக்கு மோசமாக அமைந்துவிடும்.

டெல்டா பரவுகை மட்டுமல்ல கொரோனாவின் சாதாரண பரவுகையும் வடக்கு மாகாணத்தில் மிகையாக அதிகரித்து வருகின்றமை வெளிப்படை. பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறைப் பகுதிகளில் எழுமாற்றான சோதனைகளில் சுமார் 75க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அங்கு மட்டுமல்ல இன்னும் சில இடங்களிலும் இந்தச் சமூகத் தொற்றுக்கள் தீவிரமாகத்தான் உள்ளன.

ஒருபுறம் கொரோனாவும் அதன் திரிபுகளும் மிகையாகிக் கொண்டுவரும் நிலையில், மறுபுறம் நாட்டை இயல்புக்குள் திருப்பிக் கொண்டிருக்கின்றது அரசு. அத்தியாவசியத் தேவைகள் மற்றும் அத்தியாவசியப் போக்குவரத்து மார்க்கங்கள் மட்டுமல்லாமல் கொஞ்சம் ஆடம்பரங்களும் இந்த இயல்பு நிலைக்குள் மெல்லப் புகுந்துள்ளன. தேசிய மிருகக்காட்சி சாலைகளை 25 வீதமான பார்வையாளர்களுடன் திறக்க அனுமதி, வனவிலங்கு குழந்தைகள் பூங்காக்களை திறக்க அனுமதி, உட்புற இசை நிகழ்ச்சிகளை 50 வீதமானவர்களுடன் நடத்த அனுமதி, பந்தய மையங்களை திறக்க அனுமதி என்பவை தளர்வுப் பட்டியலில் இணைந்துள்ள ஆகப்பிந்திய வரவுகள்.

நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கையில், சுற்றுலாப் பயணிகளைக் கவரவும் அரசின் கையிருப்பில் பணப் புழக்கத்தை அதிகரிக்கவும் இந்தத் தளர்வுகள் தவிர்க்க முடியாதன என்று காரணம் சொல்லப்படுகின்றது. தற்போது எமது பாதுகாப்பு எமது கைகளில் என்ற நிலை. நாம்தான் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.



## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரண்டு மாதங்களுக்குள் தடுப்பூசி

### 30 வயதுக்கு மேற்பட்டோர் இலக்கு

**கொழும்பு,ஜூலை 17**

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் கொரோனாத் தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றுக்கொடுப்பதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

அமைச்சர் நாமல் ராஜபக்ச, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் கலந்துரையாடி இந்த விசேட திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,4)

## வவுனியாவுக்கு தடுப்பூசி வழங்க தாமதமாவது ஏன்?

### மக்கள் விசனம்

வவுனியா, ஜூலை 17

கொரோனாத் தடுப்பூசி வழங்கும் பணி நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வரும் நிலையில் வவுனியாவில் தொடர்ந்தும் தாமதமாகவே காணப்படுகின்றது என்று பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்துக்கு சுமார் இரண்டு லட்சம் தடுப்பூசிகள் தேவைப்படும் நிலையில் அண்மையில் 1000 தடுப்பூசிகள் சில மருத்துவர்களின் கோரிக்கைக்கமைவாக இராணுவத்தினரால் வழங்கப்பட்டு 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஏற்றப்பட்டிருந்தன.

அத்துடன் சுகாதாரத் துறையினர், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் என குறைந்தளவிலானோருக்கே வவுனியாவில் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏனையோருக்கு தடுப்பூசி வழங்குவதில் தொடர்ந்தும் காலதாமதம் நிலவி வருகின்றது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசி வழங்கப்படும் நிலையில் கொழும்பு போன்ற பகுதிகளில் 97 வீதமான ஆசிரியர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. எனினும் வவுனியாவில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசி இதுவரை வழங்கப்படவில்லை. வவுனியா ஆசிரியர்கள் ஓரம் கட்டப்படுகின்றனரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அதேவேளை இவ்வாறான விடயங்களுக்கு வவுனியாவில் சுகாதார அதிகாரிகள் எவரும் பதில் வழங்காமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா நிலைப்பாடுகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தல்கள் வழங்கப்படும் நிலையில் வவுனியா மாவட்டத்தில் பொறுப்பான சுகாதார அதிகாரிகள் எவரும் கருத்துக்கூறாமை ஏன் என்ற கேள்வியை எழுப்புகின்றது - என்றனர். (ப-110)

## தடுப்பூசி வழங்கலில் உள்நோக்கம் இல்லை

### அமெரிக்கா விளக்கம்

கொழும்பு,ஜூலை 17

எவ்வித நிபந்தனைகளும் இன்றியே இலங்கைக்கு கொரோனாத் தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதில் எந்த உள்நோக்கமும் இல்லை என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவிக்கையில்,

உலக சுகாதார அமைப்பின் கொவேக்ஸ் திட்டத்தின் கீழ் அமெரிக்காவால் நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை உயிர்காக்கவும். நோய்த் தொற்றை ஒழிக்கவும் உதவும்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் நீண்டகாலமாக நிலவிவரும் உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் வகையில் இந்தத் தடுப்பூசி வழங்கப்படுகின்றது. இதில் எவ்வித வேறு நோக்கங்களும் கிடையாது. மக்களின் உயிர் காப்பதே நோக்கம் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டபம் திறப்பு

கொடிகாமம்,ஜூலை 17

கொடிகாமம் அத்தியடி விநாயகர் ஆலயத்தில் அமைக்கப்பட்ட நாககுல அன்ன சுரபி மண்டபத்தின் திறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அமரர்களான குலசேகரம் நாகம்மா தம்பதிகளின் ஞாபகார்த்தமாக 30 லட்சம் ரூபா செலவில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டது.

மண்டபத்தை அமரர்களின் புதல்விகளான சுகுணசோதி சின்னையா மற்றும் சிறீரஞ்சினிதேவி இராமநாதன் ஆகியோர் திறந்துவைத்தனர்.

நிகழ்வில் வரணி சிட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலய பிரதமகுரு கிரியாசக்தி குருமானி குமாரசாமி குருக்களின் ஆசியுரையும், ஓய்வுநிலை அதிபர் த.கந்தையா வரவேற்புரையையும். போக்கட்டி அ.த.க பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் வாழ்த்துரையையும் வழங்கினர். (ஜ-159)









# மன்னார் நடுக்குடா பகுதியில் மின் உற்பத்தி நிலையம் திறப்பு

மன்னார், ஜூலை 17

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நடுக்குடா பகுதியில் அமைக்கப்பட்ட "நடுக்குடா காற்றாலை மின் உற்பத்தி நிலையம்" நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

நிகழ்வில் மின் சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான் மற்றும் குலசிங்கம் திலீபன் ஆகியோர் கலந்துகொண்டு மின் உற்பத்தி நிலையத்தை திறந்துவைத்தனர். நிகழ்வில் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக குறித்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-213,56)

## இலவசக்கல்வி முறையை இல்லாதொழிக்க முயற்சி

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 17

இலங்கையிலுள்ள இலவசக்கல்வி முறைமையை இல்லாதொழித்து, தனியார் கல்வி முறைமையை முழுமையாக ஸ்தாபிப்பதற்கான மறைமுக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசு மாலபே சைட்டம் விவகாரத்தில் எம்மிடம் தோல்வியடைந்து வீட்டுக்குச் சென்றது. அதைப்போன்று இந்த அரசையும் வீட்டுக்கு அனுப்புவோம் என்று ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

கொத்தலாவல தனியார் பல்கலைக்கழக சட்டவரைவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட செயற்பாடுகளின்போது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளுக்கு எதிராகவும், குறித்த சட்ட வரைவுக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தெளிவுப்படுத்தும் ஊடக சந்திப்பு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்றுமுன்தினம் ஏற்பாடுசெய்யப்பட்டது. இதில் தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், மாணவர் அமைப்புக்கள் , பல்கலைக்கழக சங்கங்கள் என பலதரப்பட்ட சங்கங்கள் பங்குபற்றியிருந்தன. (ஓ.4)

## கொத்தலாவல பல்கலைக்கழக சட்டவரைவு நிறைவேற்றப்படும்

### ஆளுந்தரப்பு அறிவிப்பு

கொழும்பு,ஜூலை 17



கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவு தொடர்பில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனினும் திருத்தங்களுடன் சட்டவரைவை நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளோம் என்று கைத்தொழில் வளங்கள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவு தொடர்பில் ஆளும் தரப்பின் உறுப்பினர்களுக்கு மத்தியில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

கடந்த 8 ஆம் திகதி இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆளும் தரப்புக்குள் எழுந்த எதிர்ப்பின் காரணமாக இந்தச் சட்டவரைவை நிறைவேற்றல் பிற்போடப்பட்டுள்ளது- என்றார். (ஓ.4)

## சிறுமி விவகாரத்தில் கைதான கப்டன்கள் இருவருக்கு பிணை

கொழும்பு,ஜூலை 17

கல்கிஸையில் இணையவழித் தொடர்பில், 15 வயதான சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் என்று குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட தனியார் கப்பல் நிறுவனத்தின் கப்டன் மற்றும் உதவிக் கப்டன் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் இருவரும் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் குறித்த சிறுமி இருவரையும் அடையாளம் காட்டினார்.

அடையாள அணிவகுப்பை அடுத்து அவர்கள் தொடர்பிலான விசாரணைகள் முடிவடைந்துள்ளன என்று சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேகநபர்களை கடும் நிபந்தனைகளுடன் கொழும்பு மேலதிக நீதவான் லோச்சனி அபேவிக்ரம பிணையில் விடுவித்தார்.

அடுத்த கட்ட விசாரணை அல்லது முறைப்பாட்டின் சாட்சியங்களுக்கு ஏதேனும் அழுத்தம் விடுக்கப்பட்டால், வழக்கு விசாரணை முடிவடையும் வரை விளக்கமறியலில் வைக்கப்படுவீர்கள் என்று சந்தேகநபர்களுக்கு நீதவான் எச்சரிக்கை விடுத்தார். (ஓ.4)

## மேடை நாடகங்களுக்காக அரங்கங்களுக்கு சலுகை

கொழும்பு,ஜூலை 17

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட நாடகக் கலைத்துறையை ஊக்குவிப்பதற்காக, டவர் மண்டப அரங்க அறக்கட்டளைக்குரிய அரங்கங்களில், மேடை நாடகங்களை நிகழ்த்துவதற்கு சலுகை விலையில் வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற டவர் மண்டப அரங்க அறக்கட்டளையின் 297ஆவது நிர்வாகக் குழுக் கூட்டத்தில் அவர் இந்த ஆலோசனை வழங்கினார்.

அதற்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி முதல் டவர் அரங்கம், எல்ஃபின்ஸ்டன் அரங்கம் மற்றும் ருக்மணிதேவி அரங்கம் என்பவை சலுகை விலைக்கு, நாடகக் கலைஞர்களுக்கு வழங்கப்படும்.

மருதானை எல்ஃபின்ஸ்டன் அரங்கத்தை அண்மித்துள்ள சரசவிபாய கட்டிடத்தை கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கும் வகையில் எட்டு மாடிகளைக் கொண்ட பல்நோக்குக் கட்டிடமாக அபிவிருத்திசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதுவரை டவர் மண்டப அரங்க அறக்கட்டளையால் செயற்படுத்தப்படும் பிரேக் ஷ காப்புறுதியை, 2022ஆம் ஆண்டு முதல் நாடகத்துறையில் ஈடுபடும் அதிக எண்ணிக்கையிலான நாடக கலைஞர்களை உள்ளடக்கும் வகையில் முன்னெடுக்குமாறும் பிரதமர் தெரிவித்துள்ளார். அகில இலங்கை ரீதியிலான பாடசாலை மட்ட நாடகப் போட்டிகளை சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலங்களில் தொடர்ச்சியாக நடத்துவதற்கு நிர்வாகக் குழு இதன்போது தீர்மானித்தது. (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க முதலீடுகளை வரவேற்கிறது இலங்கை

வெளிநாட்டு அமைச்சர் எடுத்துரைப்பு

கொழும்பு,ஜூலை 17
அமெரிக்காவிலிருந்து மேற்கொள்ளப்படும் தனியார் துறை முதலீடுகளை இலங்கை வரவேற்கின்றது என்று வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.
இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் மற்றும் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
கொவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கும், எம். வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்தால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொருளாதாரத் தாக்கத்தைத் தணிப்பதற்கும் வழங்கப்பட்ட உதவிகளுக்கு வெளிநாட்டு அமைச்சர் அமெரிக்காவுக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.
அமெரிக்கா ஊடாக தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஒக்சிமீற்றர்கள் போன்ற அவசர மருத்துவப் பொருள்கள் மற்றும் கொவெக்ஸ் திட்டத்தின் மூலம் அனுப்பப்படும் தடுப்பூசிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.
இரு நாடுகளும் அனுபவித்துவரும் வலுவான அரசியல் மற்றும் பொருளாதார இருதரப்பு ஒத்துழைப்பைப் பயன்படுத்தி, பங்காண்மை உரையாடல் மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பின் கூட்டு ஆணைக்குழு உள்ளிட்ட ஏனைய இருதரப்பு விடயங்கள் குறித்தும் இருவரும் விரிவாகக் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)





## தடுப்பூசி ஏற்றலால் அரசுக்கு வீண் செலவு

திஸ்ஸ விதாரண ஆலோசனை

கொழும்பு,ஜூலை 17
நாட்டில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் அரசின் திட்டம் பயனற்றது. இதனால் அரசுக்கு அநாவசிய செலவே ஏற்பட்டுள்ளது என்று வைரஸ் தொடர்பான நிபுணரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.
இந்தத் திட்டத்துக்குப் பதிலாக 60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மாத்திரம் தடுப்பூசி ஏற்றுவது போதுமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# பொறுப்புக்கூறலில் நழுவியது இலங்கை

பாக்கியசோதி தெரிவிப்பு

**கொழும்பு,ஜூலை 17**
**ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதியான பொறுப்புக்கூறலை இனியும் நிறைவேற்றும் என்று நம்ப முடியாது.**

இவ்வாறு சிவில்சமூக செயற்பாட்டாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.
இலங்கையில் கடந்த 30 வருடங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய, உயர் நீதிமன்ற நீதியரசர் துலிப் நவாஸ் தலைமையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி விசாரணைக்குழுவில், சாட்சியமளிப்பதற்காக சமூகசேவை செயற்பாட்டாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அழைக்கப்பட்டிருந்தார்.
ஆணைக்குழுவில் சாட்சியமளித்த பின்னர் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,
நல்லிணக்கம் தொடர்பில் மறுசீரமைப்பு நடவடிக்கையாக 4 பொறிமுறைகளை அமைப்போம் என்று கடந்த அரசு ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தெரிவித்திருந்தது.
அவற்றில் இரண்டு விடயங்களை நிறைவேற்றியுள்ளபோதும், உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு மற்றும் பொறுப்பேற்பதற்கான பொறிமுறை ஆகிய இரண்டு விடயங்களையும் மேற்கொள்வார்கள் என்று நான் ஒருபோதும் நினைக்க மாட்டேன்- என்றார். (ஒ.4)

## தேசிய வளங்கள் விற்பனையை அரசு உடன் நிறுத்த வேண்டும்

ஐ.ம.சக்தி வலியுறுத்து

கொழும்பு,ஜூலை 17
நாட்டின் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கும், தனியார் துறையினருக்கும் விற்பனை செய்வதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையத்தின் 51 சதவீதமான பங்கை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது. அத்துடன் செலெந்திவா நிறுவனத்தின் ஊடாக நாட்டின் பெறுமதி வாய்ந்த நிலப்பரப்புக்களை தனியார் துறையினருக்கு விற்பனை செய்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அதன் ஓரங்கமான யால வனப்பகுதி விற்பனை செய்யப்படவுள்ளது. இவற்றை அரசு உடன் நிறுத்த வேண்டும். என்றார். (ஒ.4)

## கல்வித்துறைக்குள்ளும் அரசியல் தலையீடுகளா?

ஐ.ம.சக்தி விசனம்

கொழும்பு,ஜூலை 17
நாட்டின் பல்வேறு துறைகளிலும் அரசியல் ரீதியான தலையீடுகளும், தனிப்பட்ட அரசியல் நலன் நோக்கங்களும் காணப்படுகின்ற போதிலும், கல்வித்துறைக்குள்ளும் அவற்றை அனுமதிக்க முடியாது.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அதிபர், ஆசிரியர் நியமனங்களில் நியாயத்துவத்தைப் பேணாமல், கல்விக்கட்டமைப்பு மிகமோசமான பாதையில் செல்வதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள், தற்போது ஆசிரியர்களைத் தூற்றுகின்ற னர். நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் இலவசக்கல்வியைப் பெற்றுக்கொடுப்பதை இலக்காகக்கொண்டு, அதற்கு செயல்வடிவம் கொடுத்த சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கராவின் வழிவந்தவர்கள் என்ற அடிப்படையில், கல்வித்துறையின் போக்கு பெரிதும் கவலையளிக்கின்றது.
கல்விக்கட்டமைப்புடன் அரசியல் அபிலாஷைகள் கூட்டிணையும்போது, அந்தக் கட்டமைப்பு முழுவதுமாகப் பாதிப்படையும்.
அதேவேளை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல ஆசிரியர்களை 'மிகவும் மோசமானவர்கள்' என்று வர்ணித்தமையானது ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்துக்கும் இழைக்கப்பட்ட அவமரியாதையாகும்.
அவருடைய அந்தக் கருத்துத் தொடர்பில் நாம் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றோம்.
அதேவேளை, நாட்டின் ஆசிரியர் சமூகத்திடம் அவர் மன்னிப்புக்கோர வேண்டும். என்றார். (ஒ.4)

## பல்கலைக்கழக கட்டமைப்பை இராணுவ மயப்படுத்துவதா?

சு.கவும் எதிர்ப்பு

கொழும்பு,ஜூலை 17
பல்கலைக்கழக கட்டமைப்பை இராணுவ மயமாக்க இடமளிக்க முடியாது. எனவே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவை அரசு மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும்.
இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி இளைஞர் முன்னணியின் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எரிக் வீரவர்த்தன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரசின் பிரதான பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சௌபாக்கிய வேலைத்திட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. எனினும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட வரைவுக்கு எந்தவகையிலும் எம்மால் ஆதரவளிக்க முடியாது.
அது எமது எதிர்கால சந்ததியினருக்குச் செய்யும் பெரும் துரோகமாகும்- என்றார். (ஒ.4)

## விரிவுரையாளர்கள் சஜித்துடன் சந்திப்பு

கொழும்பு,ஜூலை 17
உத்தேச கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டம் தொடர்பில், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் சந்தித்து கலந்துரையாடினர். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றது.
சட்டவரைவு மற்றும் அது ஏற்படுத்தும் ஆபத்துகள், ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு ஆகியவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. இலவசக் கல்விக்கு எதிராக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும், ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக்கமாட்டாது. இலவச கல்வியைப் பாதுகாக்க ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக முன்நிற்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பில் தெரிவித்தார். (ஒ.4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தடுப்பூசிகள் 1.5 மில்லியன் வந்தடைவு

கொழும்பு,ஜூலை 17

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட மொடனா தடுப்பூசிகளின் 1.5 மில்லியன் டோஸ்கள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்துள்ளன.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவெக்ஸ் திட்டத்தின், பகிர்வுப் பொறிமுறையின் கீழ் இவை இலங்கைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

இவை முதலில் அமெரிக்காவிலிருந்து கட்டாருக்கும், பின்னர் கட்டார்எயார்வேஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தின் மூலமாக, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கும் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றில் 7 லட்சத்து 50 ஆயிரம் தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு வழங்கப்படும். ஒரு மாதத்தின் பின்னர் இரண்டாவது டோஸாக எஞ்சிய தடுப்பூசிகள் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.4)

# மாணவர்கள்மீது கருணை காட்டுங்கள்

## ஆசிரியர்களிடம் கோரிக்கை



கொழும்பு,ஜூலை 17

ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டம் காரணமாக மாணவர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மாணவர்களின் மீது கருணை கொண்டு ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச கோரிக்கை விடுத்துள் ளார்.

பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கும், போராட்டங்களில் வெற்றிபெறுவதற்கும் தொழிற்சங்கங்களுக்கு உரிமையுள்ளது.

தங்கள் உரிமைகளை நிலைநாட்ட முயலும்போது, ஏனையவர்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் என்றால் அதனை உண்மையான தொழிற்சங்கப் போராட்டம் என்று அழைக்க முடியாது.

மாணவர்களுக்கு கல்வி புகட்டுவது தேசிய போராட்டம். ஆசிரியர்கள் அவ்வாறான பொறுப்பை கைவிடக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)



# பொலிஸ் நிலையத்தில் தீ விபத்து

கொழும்பு,ஜூலை 17

மருதானை பொலிஸ் நிலையத்தின் இரண்டாவது மாடியில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

எனினும் தீயணைப்புப் படையினரின் விரைவான நடவடிக்கை காரணமாக தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தீயைக் கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவர மூன்று தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. (ஓ.4)

# சோதனைகளை அதிகரிக்காவிடில் நான்காவது அலைக்கும் வாய்ப்பு

## மருத்துவ ஆய்வுகூடம் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 17

சுகாதார அமைச்சு பி.சி.ஆர். சோதனைகளை அதிகரித்து, மரபணு ஆய்வுகளையும் அதிகரிக்காவிட்டால் அடுத்த நான்கு வாரங்களில் நான்காவது அலை உருவாகலாம் என்று மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானக் கல்லூரியின் தலைவர் ரவி குமுதேஸ் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பி.சி.ஆர். சோதனைகளை முன்னெடுப்பதற்கான திறனை அதிகரிக்குமாறு ஆய்வுகூடத் தொழிலாளர்கள், சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலதிக பி.சி.ஆர் சோதனை இயந்திரங்களுக்கான அவசியமில்லை. தற்போதுள்ள வசதிகளை வைத்துக் கொண்டு பி.சி.ஆர் சோதனைகளை பல மடங்காக அதிகரிக்க முடியும்.

சிறிய எண்ணிக்கையிலான நடமாடும் பி.சி.ஆர். ஆய்வுகூடங்கள் மூலம் பி.சி. ஆர். சோதனைகள் மற்றும் அறிக்கைகளை வெளியிடுவதில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடியும்.

குறிப்பாக உயிரிழந்தவர்களின் உடல்கள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வைக் காண உதவும்.

அரசு இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால் சுகாதார அமைச்சு தேவையான சாதனங்களைப் பெறுவதை தாமதப்படுத்துகின்றது.

நடமாடும் பி.சி.ஆர். ஆய்வுகூடங்கள் செயற்படுவதை தடுப்பதற்கான நோக்கமாக இதனைக் கருதமுடியும்.

மாதிரிகளைப் பெறுவது மருத்துவமனைகளிலும் குறைவடைந்துள்ளது.

ஆபத்தான பகுதிகள் எனக் கருதப்படும் இடங்களை சோதனைசெய்து முன்கூட்டியே பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் இடம்பெறவில்லை. சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள தரவுகள் யதார்த்தத்தை வெளிப்படுத்தவில்லை.

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இவ்வாறான செயற்பாடுகளை அவதானித்தோம்.

பொதுமக்கள் தங்கள் எச்சரிக்கையைக் கைவிடக்கூடாது என்பதே நாங்கள் அவர்களுக்கு வழங்கும் ஆலோசனை - என்றார். (ஓ.4)

# இறுதிக் கிரியைகளுக்காக நாயாற்றில் கட்டடம்

## கரைதுறைப்பற்று தவிசாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, நாயாற்றுப் பகுதியில் அந்தியேட்டி முதலான இறுதிக்கிரியைகளை மேற்கொள்வதற்குரிய கட்டடம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்துள்ளார்.

அதற்காக கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திடம் எழுத்து மூலமாக காணி ஒன்று கோரப்பட்டுளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போதுள்ள கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது மக்கள் கீரிமலைக்கோ, கெரடமடு பகுதிக்கோ சென்று அந்தியேட்டி போன்ற இறுதிக் கிரியைகளை செய்யமுடியாத நிலை உள்ளது. இதனால் மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றார்கள். அதற்காக நாயாற்றுப் பகுதியில் மக்கள்சென்று கிரியைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை நாம் முன்னெடுத்திருக்கின்றோம். குறிப்பாக நாயாற்றிலே மக்கள் சென்று இறுதிக்கிரியைகளை மேற்கொள்வதற்கான கட்டடமொன்றை அமைப்பதற்காக காணி ஒன்றைத் தரும்படி கரைதுறைப்பற்று பிரதேச செயலருக்கு எழுத்துமூலம் அறிவித்திருக்கின்றேன் - என்றார். (ப-246)

# இரு பிரிவுகள் விடுவிப்பு

கொழும்பு,ஜூலை 17

புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த இரு பகுதிகள், தனிமைப்படுத்தலில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தளம் ஜே.பி வீதியின் 9 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நரந்தனை வடமேல் கிராம சேவகர் பிரிவு ஆகியவை தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப் பட்டன என்று கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (ஓ.4)

# போலி பொலிஸாரின் கொள்ளை அதிகரிப்பு

## பொலிஸார் எச்சரிக்கை



கொழும்பு,ஜூலை 17

பொலிஸ் அதிகாரிகள் போன்று பாசாங்குசெய்து, கொள்ளையில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மோராக ஹேனா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, வெல்மில்ல மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள் மற்றும் கொழும்பு புறநகர்ப்பகுதிகளில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பொலிஸ் அதிகாரிகளாக தம்மை ஆள்மாறாட்டம் செய்து பலர் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இரு வேறு சம்பவங்களில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பொலிஸ் புலனாய்வு பிரிவு அதிகாரிகளாக தம்மை அடையாளப்படுத்தி, பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் பொலிஸாரும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ.4)

# மாகாணங்களுக்கான தடை இன்னும் நீக்கப்படவில்லை

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 17

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை இன்னும் நீக்கப்படவில்லை. அத்தியாவசிய சேவை மற்றும் ஊழியர்களுக்கு மட்டுமே பயணத்தடை ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேல் மாகாணத்தின் 14 நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் பொலிஸார் தொடர்ந்தும் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரே நாளில் 413 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 928 பேர் பயணத்தடையை மீறிப் பயணித்துள்ளனர். அவர்கள் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வாறு மாகாணங்களுக்கு இடையேயான பயணத்தடையை மீறுபவர்கள் மீது இனிமேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஓ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண் மருத்துவமனை வவுனியாவில் திறப்பு

வவுனியா,ஜூலை 17

கண் மருத்துவமனை மற்றும் பால் பொருள்கள் உற்பத்தி நிறுவனம் என்பவை நேற்றுமுன்தினம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர்.பி.எம்.எஸ். சாள்ஸ், சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துல சேன ஆகியோர் கலந்துகொண்டனர்.

வவுனியா மரக்காரம்பளையில் அமைந்துள்ள ஆனந்தி பால்பொருள்கள் உற்பத்தி நிறுவனம் மற்றும் வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள ஆனந்தி கண் மருத்துவமனை ஆகியவை அந்நிறுவனத்தின் பணிப்பாளரும், மருத்துவருமான வேலாயுதம் சர்வேஸ்வரன் தலைமையில் திறந்துவைக்கப்பட்டன.

மேலும் நிகழ்வில் வவுனியா பிரதேச செயலர் என். கமலதாசன், வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், வவுனியா நகரசபை செயலர் இ.தயாபரன் மற்றும் வவுனியா வர்த்தக சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)

# வெளிநாடுகளுக்குச் செல்ல 6 லட்சம் பேர் விண்ணப்பம்

## பௌத்தர்களே அதிகம்

கொழும்பு,ஜூலை 17

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக ஆறு லட்சம் இலங்கையர்கள், விண்ணப்பித்துள்ளனர்.

இந்தத் தகவலை ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். விசாவுக்கு விண்ணப்பித்தவர்களில் பெருமளவானோர் பௌத்தர்களாவர். இலங்கை வரலாற்றில் பெருமளவு அறிஞர்கள் நாட்டை விட்டு வெளியேற விசாவுக்கு விண்ணப்பித்தமை இதுதான் முதல் தடவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



# திடீரென தாழிறங்கிய கிராமம் 13 குடும்பங்கள் வெளியேற்றம்

கொழும்பு,ஜூலை 17

கினிகத்ஹேன ரஞ்சுலாவ பிரதேசத்திலுள்ள சந்த சிரிகம கிராமத்தில் திடீரென நிலம் தாழிறங்கியுள்ளது. அதனால் 13 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மண்சரிவு அபாயம் காரணமாக மக்கள் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கிராமத்தை அண்மித்த பகுதிகளில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மண்சரிவு ஏற்பட்டிருந்தது. மீண்டும் அவ்வாறான பாதிப்புகள் ஏற்படுமா என்று மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ஒ.4)

# யாழ்.மாணவிக்கு பிரான்ஸில் விருது

கொழும்பு,ஜூலை 17




யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகவும், பாரிஸை வசிப்பிடமாகவும் கொண்ட சுவஸ்திகா இந்திரஜித் என்ற மாணவி, பிரான்ஸில் வியத்தகு விஞ்ஞான மருத்துவ விருதைப் பெற்றுள்ளார்.

பிரான்ஸ் சுகாதார சங்கம் , பிரான்ஸ் இயற்பியல் சங்கம் மற்றும் சிமி பிசிக்ஸ் என்ற அமைப்பு ஆகியவை இணைந்து ஒவ்வொரு வருடமும் சிறந்த விஞ்ஞான ஆய்வுக்கான விருதை வழங்கி வருகின்றன. அந்த வகையில் 2021ஆம் ஆண்டுக்கான விருது, சுவஸ்திகா இந்திரஜித்துக்கு கிடைத்துள்ளது. கடந்த வருடம் காஇன் நொர்மன்டி பல்கலைக்கழகத்தில் வேதியல் பிரிவில் முனைவர் ஆய்வு நடைபெற்றது.

அதில் அயன்களும், இலத்திரன்களும் மோதுவதால் ஏற்படும் கலங்களில் உருவாகும் நேரியல் ஐய்திரோகார்பன் கொத்துகளின் மூலக்கூறு வளர்ச்சி என்ற ஆய்வை சுவஸ்திகா மேற்கொண்டிருந்தார். அது சிறந்த விஞ்ஞான ஆய்வாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (ஒ.4)

# ரிஷாத் வீட்டிலிருந்த சிறுமி உயிரிழப்பு

## பொலிஸார் விசாரணை

கொழும்பு,ஜூலை 17

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதினின் வீட்டில் பணியாற்றிய சிறுமி ஒருவர் தீக்காயமடைந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

டயகம பிரதேசத்தைச் சேர்ந்த இஷாலினி ஜூட் குமார் (வயது 16) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற சிறுமி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து ரிஷாத் பதியூதினின், கொழும்பு 7 பௌத்தாலோக மாவத்தையிலுள்ள வீட்டை நீதிவான் பார்வையிட்டுள்ளார்.

சிறுமியின் இறப்புத் தொடர்பில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொரளை பொலிஸார் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறுமியின் இறப்புத் தொடர்பில் பிரேத பரிசோதனை மேற்கொண்டு நீதிமன்றத்தில் தகவல் வெளியிடுமாறு நீதவான் நீதிமன்ற சட்ட மருத்துவருக்கு உத்தரவிட்டார். கடந்த 3 ஆம் திகதி உடலில் தீக்காயங்களுக்குள்ளான சிறுமி, கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். (ஒ.4)

# கொரோனாத் தொற்றாளர் தலைமறைவு

ஹோமாகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த கொரோனாத் தொற்றாளர் ஒருவர் நேற்றுக் காலை அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

மாத்தறை மாவட்டம் உயன மாவத்தையைச் சேர்ந்த 43 வயதான ஒருவரே தப்பிச் சென்றுள்ளார்.

இவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் இருந்து ஹோமாகம ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ.4)



# உர உற்பத்தி நிலையம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி,ஜூலை 17

கிளிநொச்சி கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் சேதனப்பசளை உற்பத்தி நிலையம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் சரவணபவன் மோகனபவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டு நிலையத்தை திறந்துவைத்தார். (ஐ-13)

# முல்லைத்தீவில் வயல் விழா

முல்லைத்தீவு,ஜூலை 17

சேதனப்பசளையை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் வயல் விழா நேறறுமுன்தினம் முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கலந்துகொண்டார்.


மேலும் நிகழ்வில் பாட விதான உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் பெருமளவு விவசாயிகள் கலந்துகொண்டனர். இதன்போது சேதன முறையில் நெற்செய்கை தொடர்பான ஆக்கபூர்வமான கருத்தாடல்களும் இடம்பெற்றன. (ஐ-13)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தவறான சோதனைகளால் கொரோனா பரவ வாய்ப்பு

## ஆய்வக நிபுணர்கள் எச்சரிக்கை



**கொழும்பு,ஜூலை 17**

**இலங்கையில் உள்ள ஒரு பிரபலமான தனியார் மருத்துவமனையில் கொரோனாத் தொற்றைக் கண்டறிவதற்கு முன்னெடுக்கப்படும் தவறான சோதனைகளால் கொரோனா பரவும் அபாயம் உள்ளது என்று மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

அறிக்கைகளின் துல்லியத்தை கேள்விக்குள்ளாக்கி, ஜூலை 13 முதல், பிரபலமான தனியார் மருத்துவமனையால் வழங்கப்படும் பி.சி.ஆர் மற்றும் அன்டிஜென் பரிசோதனை அறிக்கைகளை இனி ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று சீனா அறிவித்திருந்தது.

சீனா இந்த விடயத்தை அறிவிக்கும் வரை. இந்தத் தவறு குறித்து இலங்கை சுகாதார அதிகாரிகள் அறியாமல் இருந்தமை ஆச்சரியமளித்துள்ளது.

மேற்படி தனியார் மருத்துவமனை ஆய்வுகூடத்தால் தொற்றில்லை என்று பி.சி.ஆர். அறிக்கை வழங்கப்பட்டு இலங்கைக்குள் நுழைந்தவர்கள், பின்னர் சீனாவுக்குத் திரும்பியதும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அரச ஆய்வகங்களை புறக்கணித்து விட்டு, தனியார் நிறுவனங்களுக்கு பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி பணம் சம்பாதிக்கும் நடவடிக்கை என்பதால், நாட்டைவிட்டு வெளியேறுபவர்களிடையே மாத்திரமன்றி, நாட்டுக்குள் நுழையும் நபர்களிடமும் தொற்றுநோயின் அபாயத்தை அதிகரித்துள்ளது என்று இலங்கையில் ஆய்வக நிபுணர்களை உள்ளடக்கிய முன்னணி அமைப்பு எச்சரித்துள்ளது.

வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் அல்லது வெளிநாட்டில் இருந்து வரும் எவருடைய மாதிரிகளும் இலங்கையில் உள்ள அரச ஆய்வகங்களுக்கு அனுப்பப்படுவதில்லை, இந்தச் சோதனைகளில் பெரும்பாலானவை அந்த ஆய்வகத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. குறைந்தது பி.சி.ஆர். சோதனைகளையேனும் சரியாக மேற்கொள்ளாமல் மாறுபாடுகளை எவ்வாறு அடையாளம் காண முடியும் என்று அரச ஆய்வு கூட அதிகாரிகள் சங்கத் தலைவர் ரவி குமுதேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரபலமான தனியார் மருத்துவமனைக்கு சீனா விதித்த தடை இலங்கையின் முழு மருத்துவ ஆய்வக சேவையையும் பாதிக்கும் ஒரு கரும்புள்ளி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் பி.சி.ஆர் சோதனை அறிக்கைகளை ஒரு மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப நிபுணர் நேரடியாக கையொப்பமிட வேண்டும். கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள ஆய்வகத்தில் சோதனைகள் மேற்கொள்ளப்படாமல் பயணிகளின் பி.சி.ஆர் சோதனைகள் தரகு பணத்துக்காக ஒரு தனியார் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ஒ,4)

## கட்டுப்பாடுகள் தளர்வுடன் புதிய வழிகாட்டி வெளியீடு

கொழும்பு,ஜூலை 17

நாடளாவிய ரீதியில் தற்போது நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தி, புதிய சுகாதார வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் சுகாதார வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய உள்ளக இசைநிகழ்ச்சிகளை மண்டப கொள்ளளவில் 50 வீத பார்வையாளர்களுடன் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சிறுவர் பூங்காக்கள், விலங்குகள் சரணாலயங்களை திறப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மிருகக்காட்சிசாலைகளை பார்வையிட ஒரு தடவையில் 25 வீதமானவர்களுக்கே அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மத வழிபாட்டுத் தலங்களைத் திறப்பதற்கும், மதம் சார்ந்த நிகழ்வுகளை நடத்துவதற்கும் வழிகாட்டல்கள் வெவ்வேறாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ஒ,4)

## திருச்சி மத்திய சிறையிலிருந்து இலங்கை மீனவர்கள் விடுவிப்பு

கொழும்பு,ஜூலை 17

எல்லை மீறிய குற்றச்சாட்டில், திருச்சி மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த 10 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சென்னையிலிருந்து இலங்கைக்கு விமானத்தில் அவர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில், சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் இலங்கைத் தமிழர்கள் 80 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இலங்கையைச் சேர்ந்த 10 மீனவர்கள் படகு பழுதடைந்து தமிழக எல்லைக்குள் பிரவேசித்துள்ளனர். இதையடுத்து, படகில் இருந்த மீனவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

திருச்சி மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் கடந்த 7 மாதங்களாக மத்திய சிறை வளாகத்தில் உள்ள ஈழத்தமிழர்கள் சிறப்பு முகாமுக்கு மாற்றப்பட்டனர். இந்த நிலையில் விசாரணை நடைபெற்று தற்போது 10 மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். சிறப்பு முகாமிலுள்ள ஏனைய 70 இலங்கைத் தமிழர்களும் விரைவில் விடுவிக்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ,4)

## கௌதாரிமுனையின் மணலை விற்பனைசெய்ய நடவடிக்கை

கிளிநொச்சி,ஜூலை 17

கிளிநொச்சி பரமன்கிராயில் இருந்து கௌதாரிமுனைக்குச் செல்லும் வீதியில் சரிந்துள்ள மணல் மேட்டின் மணலை விற்பனைசெய்ய பூநகரி பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பூநகரி பிரதேச சபையால் கௌதாரி முனை வீதிக்கு இடையூறாக சரிந்துள்ள மண்ணை அகற்றவேண்டியுள்ளமையால் குறிப்பிட்ட அளவு மண் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றது. பொதுத்தேவைக்கு மண் தேவைப்படின் ( கோயில், பாடசாலை) உடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த மண் நிபந்தனைகளுடனே வழங்கப்படும் என்று பூநகரி பிரதேச சபை அறிவித்துள்ளது.

கனியவளத் திணைக்களம் மணல் வழங்குவதற்கான அனுமதியை பிரதேச சபைக்கு வழங்கியதும் தொடர்ந்து மணல் வழங்கப்படும்.

அத்துடன் மணல் தேவைப்படுவோர் 0778862556 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என்று பூநகரி பிரதேச சபை அறிவித்துள்ளது. (ஐ-13)

## பெரமுனவுக்குள் புகுந்தது கொரோனா

கொழும்பு,ஜூலை 17

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த ஊழியர் அலரிமாளிகைக்குச் சென்றுள்ளார். அங்கு அவருக்கு நடத்தப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பத்தரமுல்லை, நெலும்மாவத்தையில் அமைந்துள்ள மொட்டுக் கட்சியின் தலைமையகத்தில் உள்ள ஊழியர்களுக்கு அஸ்ராஜெனகா தடுப்பூசியே முதற்கட்டத்தில் செலுத்தப்பட்டது.

எனினும் இரண்டாம் கட்டத் தடுப்பூசி அளிப்பதற்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,4)



## இந்து மயானங்கள் பூநகரியில் துப்புரவு



கிளிநொச்சி,ஜூலை 17


கிளிநொச்சி பல்லவராயன்கட்டில் உள்ள இரு இந்து மயானங்கள் பூநகரி பிரதேச சபையால் துப்புரவு செய்யப்பட்டன.

பல்லவராயன்கட்டு மற்றும் சோழநிலா ஆகிய இந்து மயானங்களே துப்புரவுசெய்யப்பட்டன.

துப்பரவுப் பணிகளை பூநகரி பிரதேச சபையின் உப தவிசாளர் [illegible] பல்லவராயன் கட்டு வட்டார உறுப்பினர் [illegible] ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பிறப்பும் தமிழர் பாரம்பரியமும்



பழனித்துரை தர்மகுமாரன்

இன்று ஆடிப்பிறப்பு. ஆடி பிறந்து விட்டால் தமிழர் வாழ்வில் மட்டற்ற மகிழ்ச்சியும் புத்துயிர்பெற்ற மானுட எதிர்காலமும் தித்திக்கும் என்பது வரலாற்று உண்மை. தமிழர் தம் வரலாற்றில் ஆடிப்பிறப்பு என்பது கலாசார பண்பாடோடு மட்டுமன்றி உயிரோட்டத்துடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது.

தமிழர்கள் தம் வாழ்வில் குதூகலித்துக் கொண்டாடும் விழாக்கள் பல. அவற்றில் ஒன்றுதான் ஆடிப்பிறப்பு. ஆடி பிறந்தால் கோடி நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பொதுவாக ஆடிப்பிறப்பை வரவேற்கும் பண்பாடு-சம்பிரதாயம் தமிழர்களிடத்தே நிலைத்துவிட்டது.

**ஏன் தோன்றியது**

ஆடி மாதத்தில் கற்கடக ராசியில் சஞ்சரிக்க தொடங்கும் சூரியன் வடக்கு தெற்காக சஞ்சரிக்கும் காலம் இதுவாகும். இந்த வகையில்தான் ஆடி மாதம் முக்கியம் பெறுகின்றது. இந்தக் காலப்பகுதியில் மழை, குளிர், உக்கிரமடைந்து காணப்படும் வெள்ளப்பெருக்கு ஏற்படும். இதன் மூலம் மக்களுக்கு நோய் நொடிகள், தொற்றுநோய்கள், சூழல் மாசடைந்து சுவாச நோய்கள் ஏற்படுவது இயல்பானதொன்றாகும். எனவே இக்கால கட்டத்தில் மக்கள் தங்களை பொல்லாத நோயில் இருந்து பாதுகாக்க மருத்துவ குணங்களைக் கொண்ட பானமொன்றை தயாரித்து உண்டனர். அதுவே ஆடிக்கூழாகப் பயன்படுத்தப்படுகின்றது.

மூலிகைச்சாறுகள் பனம் பண்டங்கள், செடி கொடிகளின் வேர்கள் போன்றவற்றை நீரூற்றி அடுப்பில் இட்டு காய்ச்சிப் பருகும் சம்பிரதாயம் ஆடிப்பிறப்போடு சங்கமமானதில் வியப்பில்லை.

ஆனால் இன்றைய காலப்பகுதியில் கொழுத்தும் வெயிலும் எரிக்கும் வெப்பமும் ஆடி மாதத்தை அடியோடு மாற்றிவிட்டது. இருந்தபோதும் ஆடிமாதத்தில் இவ்வாறான வெப்ப நோய்களில் இருந்து தம்மைப் பாதுகாக்க மக்கள் மாரித் தெய்வத்தை வழிபடும் பண்பு பழமையானதும் புராதனமானதுமாகும். எனவே தேவர்களின் அந்திய வேளையாக வரும் ஆடிமாதத்தில் வழிபாடுகள் பரவலாக நடத்தப்படுகின்றன. அம்பிகை வழிபாடுகள் இந்தக் காலப் பகுதியில் அதிகமாக நடைபெறும் ஆடிப்பூர பண்டிகையும் இம் மாதத்திலேயே இடம்பெறுகின்றது. இதனால் ஆடிப்பிறப்பு, ஆடிப்பூரம் என்பவை ஆடி மாதத்தை தமிழ் மக்கள் மனதில் ஆழப்பதித்துள்ளன.

இந்த ஆடிப்பிறப்பில் உருவாக்கப்பட்ட உணவுப் பழக்கமானது சிறந்த மருத்துவகுணம் கொண்டதாகவும் போசாக்கு நிறைந்த உணவாகவும் காணப்படுகின்றது. இது இலங்கை தமிழரின் பாரம்பரிய பண்பாட்டு உணவாகும். ஆடிக் கொழுக்கட்டை, கூழ் என்பவை போசனை நிறைந்த இயற்கை உணவுகளாகவும் தூய்மையானவையுமாகும். இதனை எல்லோரும் விரும்பி மகிழ்வுடன் உண்பார்கள். இதில் காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, விற்றமின், கனியுப்பு, நார்ப்பொருள் நிறைந்ததாகக் காணப்படுவதனால் ஆரோக்கியமுள்ள சமூக அமைப்பு காணப்பட்டது.



**உழவருக்கு உவப்பான நாள்**

"ஆடி விதை தேடி விதை" என்பர். ஆடி மாதத்தில் முன்னெடுக்கும் தொழில்கள் பெரிய இலாபத்தை ஈட்டிக் கொடுத்தது. ஆடிப்பிறப்பன்று பிதிர்கள் தாம் வாழ்ந்து கழித்த இடங்களுக்கு வருவதாக நிலவும் ஐதீகம் காரணமாக கொழுக்கட்டை, கூழ், பனங்கிழங்கு முதலியவற்றை ஆடிப்பிறப்பன்று பிதிர்களுக்குப் படைத்து அவர்களை பிரீதி செய்யும் வழக்கம் இன்றும் நம்மிடையே நிலவுகின்றது. இவ்வாறான சம்பிரதாயங்களை பாட்டன், முப்பாட்டன் காலத்தில் இருந்து கடைப்பிடித்து தமிழர் சமூகம் ஒற்றுமையாகவும் பலமாகவும் ஒன்றுகூடியும் காணப்பட்டது. இன்று இந்த நிலை படிப்படியாக குறைந்து வருகின்றது. இதனால் சமூக மயமாதல் மாயை தோற்றமாக காணப்படுகின்றது. கிராமப்புற மக்கள் ஆடிப்பிறப்பை தெய்வபக்தியுடனும் பண்பாட்டுடனும் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். ஏனெனில் அந்த குடும்பங்களில் முதியவர்கள் வீடுகளிலே இருப்பதனால் பழமை கலையாது புதுமை புகாது பாதுகாத்து வருகிறார்கள். இதனால் அதனை பின்பற்றுபவர்கள் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கின்றனர். சொல்லுகின்றனர்.

# ஆப்கானை கைவிடுவது அச்சத்தை தருகின்றது

## புஷ் வெளிப்படை



வொஷிங்டன், ஜூலை 17

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுவது அச்சத்தையும் சோகத்தையும் தருகின்றது என்று அமெரிக்காவின் முன்னாள் அதிபர் புஷ் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க மற்றும் மேற்கத்தியப் படைகள் வெளியேற்றம்பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், இது ஆபத்தைக் குறிக்கும். ஆப்கானிலிருந்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேயப் படைகள் வெளியேறுவது அந்த நாட்டில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படுவதற்கு வழிவகுக்கும். அவர்கள் அங்குள்ள கொடுங்கோலர்களால் தண்டிக்கப்படலாம். நினைக்க முடியாத ஆபத்தை ஏற்படுத்தலாம். இந்த முடிவு சோகத்தை அளிக்கிறது' என்றார்.

**பின்னணி**

கடந்த 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி நியூயோர்க் நகரில் அமைந்துள்ள இரட்டைக் கோபுரம் அல் குவைதா தீவிரவாத அமைப்பால் தாக்கப்பட்டது. இதையடுத்து அல் குவைதா அமைப்புக்கு தலிபான்கள் உதவி செய்கின்றனர், அடைக்கலம் கொடுக்கின்றனர் என்று தெரிவித்து அந்த அமைப்புக்கு எதிராக தாக்குதல் நடத்தியது அமெரிக்கா. இந்த போரில் ஆப்கானிஸ்தான் படைகளும் அமெரிக்க படைகளின் கீழ் போரிட்டன.

தலிபான்கள் விரட்டப்பட்டு ஜனநாயக அரசு அமைக்கப்பட்டது. எனினும் தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா நடத்திய இந்த போரில் இதுவரை அமெரிக்காவால் வெற்றிபெற முடியவில்லை. சுமார் 2,400 அமெரிக்கச் சிப்பாய்களும், 10 ஆயிரம் பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர். தலிபான்களிலும் கணிசமான இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் இருந்து அமெரிக்கப் படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து திரும்பப் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதிபர் பைடன் அடுத்த மாதம் 31ஆம் திகதியுடன் ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் படைகளை முழுமையாகத் திரும்பப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தென்னாபிரிக்காவில் கலவரம்: இதுவரையில் 72 பேர் இறப்பு

ஜோகன்ஸ்பெர்க், ஜூலை 17

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிகர் ஜேக்கப் ஜூமா கைது செய்யப்பட்டதை அடுத்து அந்த நாட்டில் பல இடங்களில் கலவரங்கள் வெடித்துள்ளன.

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜூமா ஊழல் வழக்கில் கடந்த 7ஆம் திகதி கைது செய்யப்பட்டார். இதைக் கண்டித்து அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு போட்டியாக ஆளும் கட்சியினரும் வன்முறையில் இறங்கியுள்ளனர்.

ஜேக்கப் ஜூமா அதிபராக பதவி வகித்தபோது. இந்தியர்களுக்கு நாட்டை தாரை வார்த்து விட்டனர் என்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்தக் கலவரங்களில் இதுவரை 72 பேர் உயிரிழந்தனர். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வவுனியா பல்கலைக்கழகம்

## வன்னி மண்ணின் பொக்கிஷம்

கலாநிதி பா.தனபாலன்

எமது மண்ணில் புதியதொரு பல்கலைக்கழகமாக வவுனியா பல்கலைக்கழகம் தோற்றம் பெறுகின்றது. அடுத்த மாதம் ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பல்கலைக்கழகம் எமது மண்ணுக்குக் கிடைத்த மாபெரும் சொத்தாகும். யுத்தத்தால் பாதிப்புற்ற தமிழ் மண்ணை மீள்நிர்மாணம் செய்ய உதவும் கருவியாக இதனைப் பயன்படுத்த வேண்டும். இதன் உருவாக்கத்துக்கு உழைத்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

**சந்தர்ப்ப சூழ்நிலைகளை சாதகமாக்கல்**

மனிதத்துவ தேவைகள் சார்ந்த புதிய பாடநெறிகளை உருவாக்குதல் இன்று அவசியமாகவுள்ளது. சுற்றுலாத்துறை துறைசார் பட்டதாரி பாடநெறிகள், கல்வி அபிவிருத்திக் கட்டுமானம், நீர் முகாமைத்து வம், மொழிகள், மீன்பிடி, விளையாட்டுத்துறை என்ற வகையில் பட்டதாரி பாடத்துறைகள் உடனடி தொழில் வாய்ப்பைத் தரவல்லவையாக உருவாகப்பட வேண்டும்.

மற்றும் டிப்ளோமா, சான்றிதழ் பாடநெறிகள் தொழில்வாண்மைத் தேர்ச்சிகளும் உருவாக்கப்பட வேண்டும். (விவசாயம், மீன்பிடி, தேனீவளர்ப்பு) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் உள்ளூர் பொருள்களைத் தரமாக்கும் செயற்றிட்டங்கள் அதாவது பல்கலைக்கழகம் வன்னிச் சமூகம் நோக்கி, மக்களை நோக்கி நகர்ந்து அவர்களுக்கு வலுவூட்டி உடனடி பயன் கிடைக்கும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். பல்கலைக்கழகம் கிடைத்த சந்தர்ப்பத்தை எமக்கு சாதமாகப் பயன்படுத்த புலமையாளர்கள் ஒற்றுமையுடன் நிலையான நீண்டகால அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு உள்ளூர், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அமைப்புக்களுடன் இணைப்பாக்கங்களை ஏற்படுத்தி பெரும் கல்வி, கலாசாரப் பண்பாட்டுப் புரட்சியை ஏற்படுத்த முடியும்.

ஒரு தகவல் தொழில்நுட்ப, இயற்கைவள உயர் பல்கலைக்கழகமாக எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் முன்மாதிரியாக இயங்கும் சந்தர்ப்பங்களையும் சாதமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அபிவிருத்திக்காக எமது உறவுகள் வெளிநாடுகளில் இருந்து உதவத் தயாராகும் நிலையில் அவர்களையும் எம் பிரதேச அபிவிருத்தி நோக்கிய செயற்றிட்டங்களில் இணைக்க வேண்டும்.



**பல்கலைக்கழகங்களின் வெற்றி**

பல்கலைக்கழகங்களின் வெற்றியென்பது ஆராய்ச்சிகளின் பொருத்தப்பாட்டிலும் அவற்றின் பயன்பாட்டிலும் தங்கியுள்ளது. அரசாங்கக் கொள்கைகள் பிரதேச மக்களின் தேவைகள், அவர்களுக்கான வலுவூட்டல்கள், சர்வதேச தொடர்பாடல்களுடனும் ஆராய்ச்சிகள் அமைதல் வேண்டும். தற்போது உயர் கல்வி சமூகமயமாக்கப்பட வேண்டும். அப்போதுதான் பல்கலைக்கழகம் வெற்றிகொண்டு நீடித்து நிலைக்க முடியும். இதற்கு சர்வதேச ரீதியாகவும் உள்ளூர் ரீதியாகவும் தர நிர்ணயங்கள் உள்ளன. பேராசிரியர் கார்ஸ் ஜஸ்பர்ஸ் வெற்றிகரமான நவீன பல்கலைக்கழகளின் வகிபங்கைப் பின்வருமாறு எடுத்தியம்புகின்றார்.

- பிரதேச சமூகத்தின் தொழில்வாண்மையாளர்களை உருவாக்கும் - பயிற்சி மையம்
- பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பும்- ஆராய்ச்சி மையம்
- புலமைசார் சுதந்திரமும் சிந்தனையாளர்களுக்கு சுயாதீனமான ஒரு சூழலை வழங்கும் - பண்பாட்டு மையம்

இவற்றின் ஒருங்கிசைவான செயலாற்றுகை குறித்த பல்கலைக்கழகத்தின் தரத்தை உயர்த்தி வெற்றிகரமான பல்கலைக்கழகமாக செயலாற்ற வைக்கும். கற்கும் மாணவர்கள் பிரதேச கிராமங்களைத் தத்தெடுத்து அபிவிருத்தி நோக்கிய செயற்றிட்டங்கள், செயற்நிலை ஆய்வுகள், வெளிநாட்டு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்களுடனான கூட்டு செயற்றிட்டங்கள் மேற்கொள்ள வேண்டும். எமது மண்ணைச் சேர்ந்த வெளிநாடுகளிலுள்ள பல விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், ஆர்வலர்கள் இலவசமாக சேவை செய்யத் தயாராக உள்ளனர். அவர்களை உரிய வகையில் உள்வாங்கி பயன்படுத்தல், ஆய்வு மாநாடுகளையும் வெளியீடுகளையும் சிறப்பாக மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

வன்னிப் பிரதேசமும் வடக்கு மாகாணமும் கல்வி சார்ந்த பாடசாலை அதிபர், ஆசிரியர் மேற்பார்வை அதிகாரிகள் சார்ந்த வாண்மைத்துவ வலுவூட்டல்களை புதிய முறைப்படி மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிலை காணப்படுகின்றது.

நீண்டககாலமாக நிலவிவந்த யுத்த சூழல், அரசியல் திடமற்ற நிலை, பாதுகாப்பற்ற நிலை, வன்முறைகள், பேரினவாத தந்திரோபாய ஒடுக்குமுறைகளால் பல முனைகளில் பல பரிமாணங்களில் எமது மனித குலம் அழிக்கப்பட்டது. பொதுவாக எமது பிரதேச அதிபர், ஆசிரியர், கல்வி மேற்பார்வையாளர்கள், கல்வியியலாளர்கள் சுயமாக முடிவெடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றனர். இன்று ஒரு பண்பாட்டு மௌன நிலை வேரூன்றிவிட்டது. பல்கலைக்கழகங்களின் நோக்கம் அரைத்த மாவையே அரைத்து பாடநெறிகளைப் பூர்த்தி செய்வதல்ல. பொருத்தமில்லாத ஆய்வுகளைச் செய்து அலுமாரியில் அடுக்குவதுமில்லை.

எனவே உலகின் தாய் தொழில்வாண்மைக் கல்வித்துறையே ஆகும். ஆசிரியரிடம் கற்றவரே எல்லாத் தொழில்களுக்கும் செல்கின்றார்கள். எனவே எம் மண்ணில் வேரூன்றியுள்ள இப்பண்பாட்டு மௌன நிலையை முறியடிப்பதற்குரிய கல்வி விழிப்பு ணர்ச்சியை புரட்சியை ஏற்படுத்தக் கூடிய பலமான கல்வியியல் வாண்மைத்துவ அலகு வவுனியா பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்படவேண்டும். சமகால கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய அதிபர், ஆசிரியர்கள், கல்வி மேற்பார்வையாளர்களுக்கான பாடநெறிகளை நவீன முறையில் செயற்றிட்ட தொழில் வாண்மைப் பிரயோக அடிப்படையில் உருவாக்கி எமது பிரதேச கல்விப் பிரச்சினைகளை நாமே தீர்க்கக்கூடிய வலுவூட்டல்களைப் பல பரிமாணங்களில் மேற்கொள்ள வேண்டும். எனவே பல தாக்கங்களுக்கும் ஏக்கங்களுக்கும் தேவைகளுக்கும் தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு வவுனியா பல்கலைக்கழகத்தின் தோற்றம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. குறுகிய கால நீண்டகால செயற்றிட்டங்களின் அடிப்படையில் வன்னி மண்ணை நோக்கிய செலாற்றுகைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**நீண்டகால செயற்றிட்டம்**

எமது மாகாணக் கல்விப் பின்னடைவுகளுக்கு குறுகிய கால தேவைகருதி செயற்றிட்டங்களை மட்டும் பிரயோகிக்கும் நிலை காணப்படுகின்றது. தற்காலத்தில் கல்விப் பேறுகள் பயனுள்ளதாக அமைய வேண்டுமானால் நீண்டகால கல்வித் திட்டமிடல் செயற்றங்களும் தேவை. இவ் இரு நிலைகளையும் ஒன்றாக நகர்த்திச் செல்வதற்கான வலுவூட்டல்களை வழங்கும் கல்வித் தலைமைத்துவத்தின் தேவை இன்று எழுகின்றது. இதற்கு வவுனியா பல்கலைக்கழகம் அடிப்படைகளை ஏற்படுத்த வேண்டும். நீண்ட தவணைக்கான செயற்றிட்டங்கள் பொதுவாக 10 முதல் 15 வருடங்கள் கொண்டவை. எனவே முன் நோக்கிய பார்வையை அதிகப்படுத்தவதற்கும் எதிர்காலத் தேவைகளை சரியாகக் கணிப்பதற்கும் பாடசாலை சமூகத்துக்கு ஏற்பட்ட பேறு - தாக்க விளைவு என்பவற்றை அளவிடுவதற்கு உரிய கால அவகாசம் தேவை. வன்னிப் பாடசாலைகள் பெரும் பாதிப்புக்களுடன் காணப்படுகின்றன. எனவே கல்வியில் பேண்தகு அல்ல நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு பாடசாலைமட்ட முகாமைத்துவத்தில் தற்போது நீண்டகால கல்வித் திட்டமிடல்களின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

இலங்கையில் பொருளாதாரம், அபிவிருத்தி, கல்வி, வர்த்தகம், தொழில்நுட்பம், விவசாயம் எனப் பெரும்பாலான துறைகளில் வலுவிழந்து காணப்படுகின்ற வடக்கு மாகாணத்துறைகளை வலுவூட்டி, மீள்நிர்மாணம் செய்யும் ஒரு வரலாற்றைப் படைக்கும் கல்கலைக்கழகமாக புதிதாக உருவாகும் வவுனியா பல்கலைக்கழகம் திகழ வேண்டும். தனது ஊட்டப் பிரதேசம் மற்றும் பிராந்திய அபிவிருத்தியில் கூடுதலான செயலாற்றுகைகளை மேற்கொள்ளும் நவீன தேவை கருதிய பிரயோகங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY 80TH BIRTHDAY

17.07.2021



**தர்மசக்தி அம்மா**

**(இராசாத்தி)**

(பாலர் பாடசாலை ஆசிரியை)

அளவெட்டி வடக்கு மாவிலங்கையில் வசிக்கும் **தர்மசக்தி அம்மா (இராசாத்தி)** அவர்கள் **தனது 80 ஆவது பிறந்தநாளை** கொண்டாடும் இவ்வேளை இவர் நீண்டகாலம் சுகதேகியாக வாழ எல்லாம் வல்ல இறைவனையும் ஆதிபராசக்தியையும் வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள் (கனடா)

# 31 ஆம் நாள் நீங்காத நினைவில்

பிறப்பு 28 . 09 . 1967



இறப்பு 17 . 06 . 2021

**பாலசுப்பிரமணியம் ஞானேந்திரம்**

(வவி)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பங்களா வீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

**திருமதி இரத்தினேஸ்வரி இராசேந்திரா**



மண்ணில் 26.03.1950 — விண்ணில் 15.07.2021

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையில் கடந்த 16 வருடங்களாக கௌரவ மருத்துவ அத்தியட்சகராக அயராது உழைத்து வரும் **வைத்திய கலாநிதி இராசேந்திரா சுரேந்திரகுமாரன்** (சமுதாய வைத்திய நிபுணர், சிரேஷ்ட விரிவுரையாளர் - மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி இரத்தினேஸ்வரி இராசேந்திரா அவர்கள் 15.07.2021 அன்று யாழ்ப்பாணத்தில் இறைபதம் அடைந்தமையறிந்து வைத்தியசாலை சமூகம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**தலைவர், பணிப்பாளர் சபை, ஊழியர்கள்,**
**கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்.**

# கண்ணீர் அஞ்சலி

Institute of Medical Sciences நிறுவனத் தலைவர் **வைத்திய கலாநிதி சுரேந்திரகுமாரன்** அவர்களின் அன்புத் தாயாரும், நிர்வாக உத்தியோகத்தர் **திருமதி ரேணுகா சுரேந்திரகுமாரன்** அவர்களின் மாமியாருமாகிய

**திருமதி இரத்தினேஸ்வரி இராசேந்திரா**



அன்னாரின் பிரிவால்
துயருறும்
குடும்பத்தவர்களோடு
நாமும் துயர்பகிர்வதுடன்
அன்னாரின் ஆத்மா
இறைவன்
திருப்பாதங்களைப் பற்றிக்
கொள்ள எங்கள் குல
தெய்வங்களை
இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**ஈர விழிகளுடன் .....**
**IMS நிறுவன**
**பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள் மற்றும் மாணவர்கள்**

# 92 ஆவது அகவையும் 7 ஆம் ஆண்டு நினைவும்



வைத்திய கலாநிதி

**செல்வதுரை இந்திரராசா**

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

என்றும் உங்கள் நினைவில்
அன்புள்ள மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## சருமப்...

யாழ்ப்பாண மாவட்ட செயலரின் கட்டளைக்கு அமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வடக்கு மாகாண உதவிப்பணிப்பாளரின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன்படி யாழ்ப்பாணம், இணுவில், கோண்டாவில், ஆனைப்பந்தி, கந்தர்மடம் ஆகிய பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு விலை தொடர்பான களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது விலை காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது. (த-5)

# 45 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளும் நன்றி நவிலலும்

தோற்றம் 03 . 01 . 1944



மறைவு 02 . 06 . 2021

**வைத்திலிங்கம் பொன்னுத்துரை**

( ஓய்வு பெற்ற இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன உத்தியோகத்தர் )

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் மட்டுவில், சங்கானை, வவுனியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வைத்திலிங்கம் பொன்னுத்துரை அவர்கள் கடந்த 02.06.2021 அன்று காலமானார் .

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.07.2021) சனிக்கிழமை கீரிமலையில் நடைபெற்று நாளை (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது வவுனியா இல்லத்தில் ஆத்மசாந்திப் பூஜைகள் நடைபெறவுள்ளது .

சுகாதார விதிமுறைகளிற்கமைய அன்னாரின் குடும்பத்தினர் மட்டும் ஆத்மா சாந்திப் பூஜையில் கலந்துகொள்ளவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம் .

**சங்கரப்பிள்ளை வீதி,**
**இறம்பைக்குளம், வவுனியா.**

**மனைவி,**
**மகன்மார், மகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள் .**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்தலும் நன்றி நவிலலும்



22.11.1937 19.06.2021


## அமரர் வேலுப்பிள்ளை குணசிங்கம்

ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம் கரவெட்டி மேற்கு, உடையாப்பா வளவினை பிறப்பிடமாகவும் கரவெட்டி மத்தி வீரபத்திரர் கோவிலடியை வசிப்பிடமாகவும் ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தருமான வேலுப்பிள்ளை குணசிங்கம் அவர்கள் தனது 84வது வயதில் 19.06.2021 சனிக்கிழமை இயற்கை யெய்தினார். அன்னார் மறைந்த வேலுப்பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் புத்திரரும் மங்கையற்கரசி, காலஞ்சென்ற விசாலாட்சி, புவனேஸ்வரி, சிவபாக்கியம் மற்றும் தியாகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் ஜெயந்தன் (ஆஸ்திரேலியா), மிகுந்தன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), துஷ்யந்தன் (அவுஸ்திரேலியா), சுகந்தன் (கனடா) மற்றும் குமுதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராதா (அவுஸ்திரேலியா), துஷ்யந்தி (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), கவிதா (அவுஸ்திரேலியா), மஞ்சுளா (கனடா), இரகுநாதன் (சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிந்துஜா, ஷேஷாபனா, கிஷாந்த், மிதுறிகா, துமிலன், வக்ஷலன், விதுக்ஷா, கீரன், வித்தகி, லசானி, மிதுக்ஷா, மற்றும் அகரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 19.06.2021 சனிக்கிழமை கரவெட்டி மத்தி வீரபத்திரர் கோவிலடியிலமைந்த அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்றையதினம் பிற்பகல் 2.00மணிக்கு கரவெட்டி சோனப்பு மயானத்தில் தீயுடன் சங்கமமானது. அன்னார் சுகவீனமுற்றிருந்த காலங்களில் அவருக்கு வைத்தியம் செய்த அனைத்து மருத்துவர்களுக்கும் தாதியருக்கும் ஊழியர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றோம். அன்னாரின் பிரிவு நிகழ்வில் பங்கெடுத்து, செய்திகள் அனுப்பியும் தொலைபேசியில் உரையாடியும் துயர்பகின்ற அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் இறுதியாத்திரைக்கு சிறிய எண்ணிக்கையான உறவுகளே அனுமதிக்கப்பட்டமையாலும் அவரின் இன்றைய அந்தியேட்டி நிகழ்விற்கும் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டியிருப்பதாலும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 31 . 08 . 1999

உதிர்வு 03 . 06 . 2021

## அமரர் யேசுதாஸ் சுபீட்சன் ரியியுஸ்

(பரியோவான் கல்லூரி பழைய மாணவன், கிரிக்கெட் அணி வீரன்)

'நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் " (லூக் 23 :43)

*சீரோங்கும் வாழ்வதனை வையத்தில் பெற்றிடவே*
*பேரோங்கு மழலைச் செல்வமென நீ உதித்தாய்!*
*உயிரோங்கு பாசமதை அமுதோடு கலந்தூட்டவே*
*பேரோங்கு கல்வி, கலை, விளையாட்டணி வீரனென*
*உறவோங்கு அன்பு, பண்பு, நட்பில் சுவையான சுபீட்சனே!*
*சுபீட்சமோங்கு செல்வத்தின் அதிபதியாய் அணி செய்வாயென*
*உளமோங்கிய சிந்தனையை தகர்த்தே சடுதியில் சென்றதேனோ?*
*நீரோங்கு விழிகளுடன் அனுதினமும் கரைகின்றோம்*
*முளைத்தசெடி விளைச்சலின்றி மடிந்ததுவோ - குலம்*
*தளைக்கவென உழைத்த களை பாழானதோ?*
*செழித்த வாழ்வை சீரழித்த செயலானதோ?*
*ஜொலிக்கும் முத்தே, எம் சொத்தே வித்தா நீரோ - மனம்*
*திளைக்க அம்மா அப்பாவென அழைப்பார் யாரோ?*
*மடியும் நாள்வரை ஓயாது உன் நினைவலைகள்*
*அழைத்த இறைவனிடம் ஆன்மா அமைதிபெற வேண்டுகின்றோம்.*

26. ஏ.வி.
கொழும்புதுறை

பிரிவால்
பெற்றோர் உறவினர், நண்பர்கள்

## வெல்டர் தேவை

நற்குணமுள்ள அனுபவமான வெல்டர் உதவியாளர் தேவை. யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு 076 615 0138

## மருந்தாளர் தேவை

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவை.

( Pharmacist with Certificate )

தொடர்பு : 076 898 9523

## நாஹரா மருத்துவ நிலையம்

கை, கால் விறைப்பு, வீக்கம், மூட்டுக்கள் தேய்வு, அல்சர் தீராத புண்கள், முழங்கால் வாதம் - சிறப்பு சிகிச்சை

அறிவு தெளியாத பாரிசவாதம் - உடனடி நிவாரணம் பெறல்

வாங்கி மூன் லேன்,
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி
(ஜெகபதி வீடு)
மானிப்பாய்

077 321 2740

## வியாபார பிரதிநிதி தேவை

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்திய சாலைக்கு வியாபார பிரதிநிதிகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். (6 மாதம் ஒப்பந்த அடிப்படையிலான வேலை) வியாபார பிரதிநிதி எண்ணிக்கை 60

**தகைமை-**

- வியாபார கற்கைநெறி பூர்த்தி செய்தவர்கள்
- வேலை முன்னனுபவம் உள்ளவர்கள்
- களத்தில் வேலை செய்யக் கூடியவர்கள்.

தங்கள் விண்ணப்பங்களை 076 7711417 எனும் இலக்கத்திற்கு Viber, Whatsapp மூலமாகவும் நேரடியாகவும் கையளிக்கலாம்.

**தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை**
**துர்க்கை அம்மன் ஆலயம் முன்பாக, தெல்லிப்பளை.**
**021 224 3722**

## கொரோனா...

மனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.விஜே சூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், 490 குழந்தைகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த குழந்தைகளுள் எந்தவொரு குழந்தைக்கும் மருத்துவமனைக்குள் வைத்து கொரோனா தொற்றவில்லை என்றும், இவர்கள் அனைவருக்கும் சமூகத்திலிருந்தே கொரோனா தொற்றியுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த-22)

## விற்பனைக்கு

பான்டில், கரணம், சைனா வகையான புறாக்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு : வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அருகாமை
T.P : 021 222 9393

## பொதுக்கூட்ட அறிவித்தல் பிரேரணை கோருதல்

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின் பொதுக்கூட்டம் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கான பிரேரணைகள் இருப்பின் 24.07.2021 ற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**செயலாளர்.**
**தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ.து)**
**021 224 3722**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் வெளிவாரிப் பரீட்சைகள்

**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி ( வெளிவாரி )**

- முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2019
- இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2019

மேற்படி பரீட்சைகளினை 31.07.2021 (சனிக்கிழமை) தொடக்கம் 05.08.2021 (வியாழக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 26.07.2021 (திங்கட்கிழமை) தொடக்கம் 30.07.2021 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு 021 – 222 – 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.**

**16.07.2021** **பதிவாளர்**

# கண்ணீர் அஞ்சலி



## அருளானந்தம் ஞானேஸ்வரன்

( றமணன் )

அவர்கள் (15.07.2021) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

கண்ணில் நீரோடு கலங்கி நிற்கும்
கோவளம் உறவுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை - இந்தியா தொடர்

# காயம் காரணமாக விலகினார் குசல்!


கொழும்பு, ஜூலை 17

இந்தியாவுக்கு எதிரான ரி20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடர்களில் இருந்து இலங்கை அணியின் முன்னணி வீரரான குசல் பெரேரா விலகினார்.



இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது. முதலாவது ஆட்டம் நாளையும், இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆட்டங்கள் முறையே எதிர்வரும் 20ஆம் மற்றும் 23ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. மூன்று ரி20 ஆட்டங்களும் முறையே 25, 27, 29ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

இந்தத் தொடருக்காக இரு அணியினரும் தற்போது தீவிர பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டுள்ள நிலையில் காயம் காரணமாக தொடரில் இருந்து விலகியுள்ளார் இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குசல் பெரேரா. தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்தால்தான் அவர் விலகியுள்ளார். காயத்தின் தீவிரத்தன்மை குறித்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)



## ஒலிம்பிக்கில் பங்கேற்பேன் ஜோகோவிக் உறுதிப்பாடு!

டோக்கியோ, ஜூலை 17

டோக்கியோ ஒலிம்பிக் தொடரில் பங்கேற்பேன் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் சேர்பிய வீரரான ஜோகோவிக்.

டோக்கியோ ஒலிம்பிக் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரிலிருந்து நடால், பெடரர், திய்ம் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பலர் விலகியுள்ளனர். கொரோனாத் தொற்று அச்சம் மற்றும் காயம் காரணமாக அவர்கள் விலகிய நிலையில் ஜோகோவிக் தொடரில் பங்கேற்பது தொடர்பான தனது கருத்தைத் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில், தொடரில் பங்கேற்பேன் என்று அவர் நேற்று உறுதிப்படுத்தினார். (ம)

## ‘தாதா’ வாழ்வு படமாகின்றது

புதுடெல்லி, ஜூலை 16

இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலியின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக எடுக்கப்படவுள்ளது. இந்திய அணியின் தலைவர்கள் வரிசையில் வெற்றிகரமான தலைவராக வலம் வந்தவர் சவுரவ் கங்குலி. 1996ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமாகி அடுத்தடுத்து இரு சதங்களை அடித்து கவனத்தை ஈர்த்தவர்.

2000ஆம் ஆண்டில் இந்திய அணிக்குள் ஆட்ட நிர்ணய விவகாரம் தலைதூக்கியபின் தலைவராக கங்குலி நியமிக்கப்பட்டார். தனது திறமையாலும், தலைமைப் பண்பாலும் சிறந்த தலைவராக கங்குலி வலம் வந்தார்.

தற்போது பிசிசிஐ தலைவராக இருக்கும் கங்குலியின் வாழ்க்கை திரைப்படமாக உருவாகவுள்ளதாக கடந்த சில வருடங்களாகவே செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், இதுவரை கங்குலி இவற்றை மறுத்து வந்திருந்தார். தற்போது, தனது பயோபிக் எடுக்க சம்மதம் தெரிவித்துள்ளதாக கங்குலி கூறியுள்ளார். ‘ஆம் எனது பயோபிக் எடுக்க சம்மதித்துள்ளேன். ஹிந்தியில் உருவாகிறது. இப்போதைக்கு இயக்குநரின் பெயரைச் சொல்வது சாத்தியமற்றது. எல்லாம் ஏற்பாடு செய்ய இன்னும் சில தினங்கள் ஆகும்’ என்றார். (ம)



### சொந்த நாட்டு ரசிகர்களே

# இங்கிலாந்து வீரர்கள் மீது இனத்துவேசப் பேச்சுக்கள்!

### இங்கிலாந்துப் பிரதமர் உள்ளிட்ட பல தலைவர்கள் கண்டனம்



லண்டன், ஜூலை 16

யூரோ கிண்ண இறுதியாட்டத்தில் பெனால்டி ஷூட்டை பயன்படுத்தத் தவறிய இங்கிலாந்து கறுப்பின வீரர்கள் மீது நிறவெறிக் கருத்துக்கள் கடுமையாக முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இதற்கு பிரிட்டன் பிரதமர் உள்ளிட்ட பலரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

லண்டன் வெம்ளி மைதானத்தில் அண்மையில் நடந்த யூரோ கிண்ண இறுதி ஆட்டத்தில் இத்தாலி அணியை எதிர்த்து இங்கிலாந்து அணி மோதியது. ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து சமநிலையில் இருந்ததையடுத்து, பெனால்டி ஷூட் முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் இங்கிலாந்து அணியை 2:3 என்ற கணக்கில் இத்தாலி அணி வென்று 50 ஆண்டுகளுக்குப் பின் கிண்ணம் வென்றது.

இங்கிலாந்து அணியில் கேப்டன் கேன், மெக்குயிர் இருவரும் பெனால்டி ஷூட்டில் கோல் அடித்தனர். ஆனால், மற்ற 3 வீரர்களான மார்கஸ் ராஷ்போர்ட், ஜாடன் சான்சோ, சாகா ஆகியோர் அடித்த கோல்களை இத்தாலி கோல்கீப்பர் டோனாருமா தடுத்துவிட்டார். இங்கிலாந்து தரப்பில் கோல் அடிக்கத் தவறிய 3 வீரர்களுமே கறுப்பின வீரர்கள். இங்கிலாந்து அணியின் தோல்விக்கு இந்த 3 கறுப்பின வீரர்களும் காரணமாகி விட்டதாகக் கூறி சமூக வலைதளத்தில் இங்கிலாந்து ரசிகர்கள் நிறவெறி, இனவெறியின் உச்சத்துக்குச் சென்று விமர்சித்தனர்.

பண்பாளர்களாக, நாகரிகம் தெரிந்த ரசிகர்களாக இருந்துவந்த இங்கிலாந்து ரசிகர்கள் தோல்வியைச் சகிக்க முடியாமல் 3 வீரர்களையும், தேசத்தோடும், நிறவெறியோடும் தொடர்புபடுத்தி விமர்சித்தது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. உலக அளவில் கால்பந்து ரசிகர்களும், நிர்வாகிகளும் இந்த நிறவெறி விமர்சனங்களால் மிகுந்த வேதனை அடைந்து கண்டனம் தெரிவித்துள்ளனர். இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் பீற்றர்சன் தனது கீச்சகத்தில் பதிவிட்ட கண்டனத்தில், ‘என் காரில், நான் வீட்டுக்குச் செல்லும்போது நான் பார்த்த காட்சிகள் மோசமானவை. இதுதான் 2021ஆம் ஆண்டில் நமது நடத்தையா? வீரர்களை அவமானப்படுத்துவது யாருக்கு மகிழ்ச்சியைத் தரும்? உண்மையில் 2030ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை நடத்த இங்கிலாந்துக்குத் தகுதி இருக்கிறதா?’ எனத் தெரிவித்துள்ளார்.

ரசிகர்களின் நிறவெறி பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்த பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்ஸன், தனது கீச்சகத்தில், ‘எமது ஹீரோக்கள் புகழ்வதற்குத் தகுதியானவர்கள். நிறவெறியுடன் சமூக வலைதளத்தில் விமர்சிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். சமூக வலைதளத்தில் நிறவெறியுடன் கருத்துகளைப் பதிவிட்டவர்கள் கண்டிப்பாக தங்களைப் பார்த்து வெட்கப்பட வேண்டும்’ எனத் தெரிவித்துள்ளார். கால்பந்து அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில், ‘இங்கிலாந்து வீரர்கள் மீதான நிறவெறி, இனவெறிப் பேச்சுக்குக் கண்டனம் தெரிவிக்கிறோம். இந்தத் தொடர் முழுவதும் நிறவெறி தொடர்பான சர்ச்சைகள் எழுந்துள்ளன’ எனத் தெரிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணி சிட்டிவேரம் கண்ணகையம்மன் கோவில் சப்த தள இராஜகோபுரம் அமைப்பதற்கான கூறுவிலை கோரல்



வரலாற்றுப் புகழ் வாய்ந்த மேற்படி ஆலயத்தில் கருங்கற்கலால் நிறைவு செய்யப்பட்ட கல் ஆரத்தின் மேல் சப்த தளங்களை உடைய அதி சுந்தர இராஜ கோபுரத்தை அமைப்பதற்காக அனுபவம் வாய்ந்த பொருத்தமான ஸ்தபதிகளிடமிருந்து கூறுவிலை கோரப்படுகிறது. உரிய நிபந்தனைகள் உள்ளடங்கிய படிவத்தை ஆலயத்தில் அமைந்துள்ள காரியாலயத்தில் பெற்று பூர்த்தி செய்து ஏழு நாட்களிற்குள் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்

**படிவத்தின் விலை - 5000/-**

| தலைவர் | தலைவர் |
|---|---|
| ராஜகோபுர திருப்பணிசபை | ஆலயபரிபாலன சபையினர் |
| 077 669 9920 | 077 502 0983 |

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் எரிபொருள் நிரப்பு நிலைய நிலக்கீழ் தாங்கிக்கான தொட்டி அமைத்தலுக்கான
## கேள்வி கோரல்

எமது சங்கத்திற்கான எரிபொருள் நிரப்பு நிலைய நிலக்கீழ் தாங்கிக்கான தொட்டி அமைத்தலுக்கான கேள்வி கோரல்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. இது தொடர்பான விபரங்களை சங்க அலுவலக நேரத்தில் பெற்றுப் பார்வையிடலாம். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1000.00 செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி கோரல்களை 22.07.2021 இற்கு முன்னதாக "பொது முகாமையாளர் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வேலணை" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : அலுவலக நேரம் (காலை 8.30 – மாலை 5.00)
0212211522

**பொது முகாமையாளர்**
**வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**வேலணை.**


## 14 பேருக்கு...

தலைமறைவானவர்கள் புத்தளம், காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை நகர் வர்த்தக தொகுதியில் 23 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 7 வர்த்தகர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 6 பேரும் அவர்களுடன் தொடர்புடையவர்களும் தப்பியோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர, மேலும் 40 பேரிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜென் பரிசோதனையில் 7 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் வங்கி முகாமையாளர், வங்கி ஊழியர் ஒருவர், நகர சபை ஊழியர்கள் இருவர் மற்றும் பொதுமக்கள் மூவர் அடங்குகின்றனர்.

பருத்தித்துறை நகர் நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் முடக்கப்பட்டு வங்கிகள் மட்டும் அத்தியாவசிய சேவைகளில் மட்டும் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-26)

## ஸ்டாலின்,...

வாறே, நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட பின்னர் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சியின் பரப்புரை செயலாளர் துமிந்த நாகமுவவும் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இலவசக் கல்வியைப் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தி ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கொழும்பில் கடந்த 8ஆம் திகதி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அன்றையதினம் அவர்களுக்குப் பிணை வழங்கியபோதும் அவர்கள் பொலிஸாரால் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

கொழும்பிலிருந்து பஸ்ஸில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அழைத்துவரப்பட்டு, கேப்பாப்பிலவு விமானப்படை முகாமில் உள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், இவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி மறுநாள் 9ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை நாடு முழுவதிலும் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும் சுமார் 50 ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களால் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.

இதன்போது ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தரப்பினரைத் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்குமாறு தொழிற்சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கையொப்பமிட்ட ஜனாதிபதிக்கான மனு, ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ஜோசப் ஸ்டாலின் குழுவினரின் விடுதலையை வலியுறுத்தி கடந்த 5 நாள்களாக இணையவழி கற்பித்தல் புறக்கணிப்புப் போராட்டத்தை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்திருந்தன. பல்வேறு விதமான எதிர்ப்பு நடவடிக்கைகளையடுத்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 16 பேர் தனிமைப்படுத்தலில் இருந்து நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, கண்டி பல்லேகலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த முன்னிலை சோசலிஷக் கட்சியின் பரப்புரைச் செயலாளர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட 6 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 7ஆம் திகதிநடைபெற்ற எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டிருந்த, துமிந்த நாகமுவ உள்ளிட்ட 6 பேர், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில், கொம்பனித் தெரு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், பொலிஸாரால் தனிமைப்படுத்தலுக்காக பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். (த-22)

## துயர் பகிர்கின்றோம்

### திருமதி இரத்தினேஸ்வரி இராசேந்திரா



கடந்த 15.07.2021 அன்று காலமான திருமதி இரத்தினேஸ்வரி இராசேந்திரா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் புதல்வர் **வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன்** (தலைவர், சட்ட மருத்துவத்துறை, மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்) மற்றும் அவர்களினது ஏனைய குடும்ப உறுப்பினர்களதும் கவலையில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர்கள் ,**
**சட்ட மருத்துவத்துறை**
**யாழ். பல்கலைக்கழகம்**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 16 |
| 05 | 07 |
| 1947 | 2021 |

## திருமதி சரவணமுத்து ஞானேஸ்வரி
### ( ஞானம் )

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், மானிப்பாய் பட்டினசபை வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரவணமுத்து ஞானேஸ்வரி (ஞானம்) நேற்று (16.07.2021) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரவணமுத்து அவர்களின் அன்புப் பாரியாரும், சசிலினி (யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - ஆசிரியை), சசீலன் (நெதர்லாந்து), சசிதரன் (நெதர்லாந்து), சசீந்தினி (பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு தயாரும், சற்குனேஸ்வரன் (யாழ்.ஸ்கந்த வரோதயாக் கல்லூரி - ஆசிரியர்), மங்களாம்பிகை (நெதர்லாந்து), திஷாந்தினி (நெதர்லாந்து), குருபரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சொர்ணலிங்கம் (குணிகாசலம்), செல்வராணி, தங்கராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஏகநாயகி, பாலசிங்கம், அமரர் குருநாதர் ஆகியோரின் மைத்துனியும், சாறுகா, சாவின், சாங்கீர்த்தன், சந்தோஷ், சஞ்சிதா, ரணுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்**

**பட்டினசபை வீதி,**
**மானிப்பாய்**

**தொடர்பு : 077 07[illegible] [illegible]415**
**077 952 7293**

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி இரத்தினேஸ்வரி இராசேந்திரா

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையின் முன்னாள் துறைத்தலைவரும், சிரேஸ்ட விரிவுரையாளருமான **வைத்திய கலாநிதி இராசேந்திரா சுரேந்திரகுமாரன்** அவர்களின் பாசமிகு தாயார் திருமதி இராசேந்திரா இரத்தினேஸ்வரி அவர்கள் 15.07.2021 அன்று இறைபதம் அடைந்தமையினை இட்டு மீளாத்துயர் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது திணைக்களம் சார்பான ஆழ்ந்த அனுதாபங்களினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை**
**மருத்துவபீடம்,**
**யாழ் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுப்பூசி...

இதன் காரணமாக வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் யாழ்ப்பாணத்தில் திட்டமிட்டவாறு தடுப்பூசி வழங்கும் பணியை முன்னெடுக்க முடியவில்லை என்று தெரியவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இரண்டாம் கட்டமாக 50 ஆயிரம் சைனோபோர்ம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருந்தன. மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணிகள், முதியோர் இல்லங்களில் உள்ளவர்கள், சுகாதாரத் துறை தவிர்ந்த ஏனைய அரச பணிகளின் முன்களப் பணியாளர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாக தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்றன. இந்த நிலையில் கடந்த வாரம் திடீரென ஆசிரியர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் 9 ஆயிரத்து 700 ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றவேண்டும் என்றும் வழங்கப்பட்ட தடுப்பூசி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்குவதற்கே போதாது எனவும் கொழும்பு சுகாதார அமைச்சுக்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போது கடந்த வார இறுதியில் கொழும்புக்கு கிடைக்கப்பெறும் 20 லட்சம் சைனோபோர்ம் தடுப்பூசியில் 50 ஆயிரம் தடுப்பூசிகளை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வழங்குவதாக கொழும்பு சுகாதார அமைச்சின் அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர். வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினர், அந்தத் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்ற பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றலை ஆசிரியர்களுக்கு ஆரம்பிப்பதாகப் பதிலளித்திருந்தனர்.

ஆனாலும் கொழும்பு சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைவாக ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படுகின்றது. தாமதிக்காமல் ஏற்றுங்கள் என்று மீண்டும் அழுத்தமாக வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்திற்குப் பணிப்பு விடுத்துள்ளனர். இதனையடுத்து ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 50 ஆயிரம் தடுப்பூசிகளும் முடிவடைந்துள்ளன. இதனால் திட்டமிட்டவாறு 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் முழுமையாக தடுப்பூசி ஏற்றி முடிக்கப்படவில்லை. திட்டம் அரைகுறையாக இடைநடுவில் உள்ளது.

இதேவேளை இரண்டாம் கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் 51 ஆயிரத்து 390 பேருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. முதல் கட்டமாக வழங்கிய தடுப்பூசிகளில் எஞ்சிய தடுப்பூசிகள் மற்றும் முதல் கட்டமாக தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட இரண்டாது டோஸை சிலர் ஏற்காமையால் மிஞ்சிய தடுப்பூசிகள் என்பவற்றை இணைத்தே 51 ஆயிரத்து 390 பேருக்கு இரண்டாம் கட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்றப்பட்டுள்ளன. (ஒ.5)

## இறந்த...

தக் குழந்தைக்கு கொவிட்19 நோய்த் தொற்றுள்ளமை சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

9 மாதக் குழந்தை திடீர் சுகவீனம் காரணமாக சங்கானை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளது. எனினும், அங்கிருந்து நேற்றிரவு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது. முதலாவது பி.சி.ஆர். பரிசோதனையில் மூலக்கூறுகள் போதாது என திருப்பப்பட்டது. மீண்டும் எடுக்கப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் குழந்தைக்கு கொவிட்19 நோய்த்தொற்று இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த குழந்தைக்கு கொவிட் 19 நோய்த்தொற்று உள்ளமை முதன்முறையாகக் கண்டறியப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (து-26)

## வட்டக்கச்சியிலும்...

ளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார தரப்பு குறிப்பிட்டுள்ளது.

குறித்த பகுதியில் கடந்த 4 நாள்களில் 4 மற்றும் 6 வயதான சிறுவர் உட்பட 14பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

மேற்படி 14 பேரில் 10 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். 3 பேர் நேற்றுமுன்தினமும், அதற்கு முந்தினங்களில் தலா ஒவ்வொருவரும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

இந்தநிலையில் தொற்றுக்குள்ளானவர்கள் இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டிருக்கின்றனர். (து-6,113)

## கல்வி....

1992 ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்து இரணைமாதா நகரில் வசித்துவந்த நிலையில் போர் நிறைவுக்கு வந்த பின்னர் 2018 இல் 366 நாள்கள் தொடர் போராட்டத்தின் பின்னர் இரணைதீவில் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

அன்று தொடக்கம் பல்வேறு அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் தற்போது அங்குள்ள கிளி. இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையை மாகாண குறித்தொதுக்கப்பட்ட 7.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

இந்தநிலையில், கடந்த 14ஆம் திகதி பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 12ஆம் திகதி நிறைவு பெறும் வகையில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள குறித்த பாடசாலையின் அதிபர், வலயக் கல்விப் பணிமனையின் தொழிநுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்தக்காரர் உள்ளிட்ட குழுவினர் இரணைத்தீவுக்கு செல்வதற்காக இரணைமாதாநகர் கடற்கரைக்குச் சென்றனர். எனினும், அங்கிருந்த கடற்படையினர் அவர்களை திருப்பி அனுப்பியுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி, இரணைத்தீவுக்குச்செல்ல அனுமதிக்க முடியாது என கடற்படையினர் கூறினர். ஆனால் சுமார் 150 குடும்பங்கள் வரை இரணைத் தீவில் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-214)

## போதைக்கு...

வாழ்வுக்கு அனுப்பி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் கட்டளையிட்டார். பெற்றோர் மன்றில் முன்னிலையாகி பிள்ளைகளை சீர்திருத்தத்துக்கு அனுப்ப விண்ணப்பம் செய்தமைக்கு அமைய இந்தக் கட்டளையை நீதிமன்றம் நேற்று வழங்கியது. யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 19 வயதுடைய சகோதரர்கள் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களின் பெற்றோர் சட்டத்தரணி க.நிசாந்நன் ஊடாக மன்றில் முன்னிலையாகி தமது விண்ணப்பத்தை மன்றுக்கு முன்வைத்தனர்.

"சந்தேக நபர்கள் இருவரும் நீண்டகாலமாக போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். அவர்களை நல்லொழுக்கத்துக்கு மாற்ற பெற்றோர் பெரும் முயற்சிகள் எடுத்தும் பயனற்றுப் போகின. சகோதரர்களான இருவரையும் சீர்திருத்த சமூகத்தில் வாழ நீதிமன்றம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று பெற்றோர் சார்பில் சட்டத்தரணி விண்ணப்பம் செய்தார்.

சந்தேகநபர்களின் பெற்றோர் சார்பிலான விண்ணப்பம் மற்றும் சந்தேக நபர்கள் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டமையை ஆராய்ந்த நீதிவான் ஏ. பீற்றர் போல், இருவருக்கும் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். சிறைத் தண்டனைக் காலமான ஒரு வருட காலத்துக்கு சகோதரர்கள் இருவரில் ஒருவரை கந்தக்காடு மறுவாழ்வு நிலையத்துக்கும் மற்றையவரை பல்லேகல மறுவாழ்வு நிலையத்துக்கும் அனுப்பி மறுவாழ்வு வழங்க கட்டளையிட்டார். (து-26)

## 500 பனைகள்...

சுதாகரன் யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் முறைப்பாட்டை கையளித்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டில் "அரியாலை கிழக்கில் சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. 500 வரையான பனைகள் அழிக்கப்பட்டு, சிலாகைகளாக்கப்பட்டு கௌதாரிமுனைக்கு கடல் மார்க்கமாக கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இத்தகைய செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் கடலட்டை பண்ணைக்கான எந்த அனுமதியும் நல்லூர் பிரதேசசபையில் பெறப்படவில்லை. அதுமட்டுமல்லாது அந்தப்பிரதேசத்தில் வீடு கட்டுவதற்கான முன் அனுமதி பெறப்பட்டு பின்னர் அட்டை வளர்ப்புக்காக கட்டட அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் ஒருவரை முகாமையாளராக கொண்டே குறித்த கடலட்டை இனப்பெருக்க நிலையம் அரியாலை கிழக்கில் செயற்பட்டு வருகின்றது. குறித்த கடலட்டை இனப்பெருக்கம் இடம்பெற்று வரும் கட்டடத்துக்கு வழங்கப்பட்ட அனுமதி அதற்கான வருமான வரி என்பன செலுத்தப்படாமல் இருப்பதன் காரணமாக பிரதேச சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக்டிறஞ்சனின் கவனத்துக்கும் பிரதேச சபை உறுப்பினர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். (து-இ)

## இளைஞர்களிடம்...

மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மீண்டும் வலியுறுத்தியுள்ளார். பாணந்துறை பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

"கப்பம் பெறுபவர்கள், பாதாள குழுவினர், வன்கொடுமையில் ஈடுபடுபவர்கள், சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்கள், போதைப்பொருள் விற்பனையாளர்கள் இருக்கும்வரை அச்சம், பீதியின்றி வாழக்கூடிய சமூக கட்டமைப்பை உருவாக்கிவிடமுடியாது. எனவே, மேற்படி காரணிகளை இல்லாதொழித்து மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்குவதே எமது பிரதான நோக்கம்.

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இராணுவப் பயிற்சியளிக்க வேண்டும் என நான் நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்டேன். அதற்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பின. இராணுவப் பயிற்சியென்பது சிலர் கூறுவதுபோல 'மில்டரி காரரை' உருவாக்கும் நடவடிக்கை அல்ல.

எனினும் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு ஏதேனும் பயிற்சியளிக்க வேண்டுமெனில் அதற்கு பொருத்தமான இடம்தான் இராணுவ முகாம். தேவையான வசதிகளும், ஒழுக்க கட்டமைப்பும் அங்கு உள்ளது.

ஆளுமை மற்றும் தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்துவதற்கான பாடத்திட்டம் உருவாக்கப்படவேண்டும். அவ்வாறு செய்தால் கட்டங்கட்டமாக ஒழுக்கமுள்ள சமூகத்தை கட்டியெழுப்பலாம்." என்றார். (து-44)

## வல்வெட்டித்துறையில்...

யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாவலடியில் நேற்று 30 பேரிடம் எழுமாறாக முன்னெடுக்கபட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 7 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.

இதன்மூலம் வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நான்கு நாள்களில் 95 பேருக்கு கொவிட்19 நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (து-26)

## 41 பேர்...

ழந்தவர்களில் 23 ஆண்களும், 18 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களில் 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட 9 ஆண்களும் 3 பெண்களும் உள்ளடங்குவர். இதில், 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 14 ஆண்கள் மற்றும் 15 பெண்களின் இறப்புகளும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா இறப்புகளின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 702 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்று ஆயிரத்து 517 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 71 பேர் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து தனிமைப்படுத்தலுக்குள்ளாகி வந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 82 ஆயிரத்து 60 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 54 ஆயிரத்து 871 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 23 ஆயிரத்து 487 பேர் சிகிச்சை பெறுகின்றனர். (து-22)

© 2000 Agfa-Gevaert N.V.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலையான...

இலங்கை ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உயர்நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன, தலங்கம பொலிஸ் பொறுப்பதிகாரி, மிரிஹானா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார். (த-இ)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு.
1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும்.
(யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரம்) தொடர்புகொள்ளும் நேரம் 9.30 AM - 17.00 PM
தொடர்பு: 076-221 2037
076-734 1023
077-064 2661

### வேலை வாய்ப்பு

எமது தனியார் விளம்பர நிறுவனத்துக்கு தரம்-10, O/L,A/L படித்த ஆண், பெண் இருபாலாரும் வேலைக்குத் தேவை நேர்முகத் தெரிவு மூலம் தெரிவு செய்யப்படும்.

No.12, கச்சேரி வீதி யாழ்ப்பாணம். 076 865 1408

### வேலையாள்கள் தேவை

**TVS - மோட்டார்ஸ் கம்பனிக்கு**

பின்வரும் வேலையாள்கள் தேவை.
1. மோட்டார் சைக்கிள் மெக்கானிக்
2. ஆட்டோ மெக்கானிக்
3. சேவிஸ் செய்யக்கூடியவர்

021 224 2322
077 631 3655

### வேலையாட்கள் தேவை

Computer Centre க்கு பெண் வேலையாட்கள் தேவை.

K.K.S றோட், கொக்குவில். தொடர்பு 076 663 7061

### வேலையாள்கள் தேவை

உஷன் பகுதியில் அமைந்துள்ள தென்னந் தோட்டத்தை பராமரித்து மேற்பார்வை செய்வதற்கு அனுபவமுள்ள **பண்ணை முகாமையாளர்** (Farm Manager) மற்றும் கூலியாள் (Labour) தேவை. (தங்கி நின்று வேலைசெய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது) 076 316 5734

### உடனடி வேலைவாய்ப்பு (ஆண்/பெண் )

1. அலுவலக உதவியாளர்
2. வாடிக்கையாளர் சேவை
3. கொள்வனவு முகாமையாளர்
4. விற்பனை முகவர்
5. வெளிக்கள உத்தியோகத்தர்
6. தகவல் சேகரிப்பாளர்
7. காசாளர் 8. சாரதி 9. மெக்கானிக்
10. கணினி இயக்குனர்

தொடர்புகளுக்கு 076 092 8460

### செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு



மீண்டும் ஓர் அரிய வாய்ப்பு கேள்தகைமை குறைபாட்டினால் அவதிப்படுகின்றீர்களா? கவலை வேண்டாம் ரூபாய் 4999 /= மட்டுமே செலுத்தி, செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம். விரையுங்கள் குறைந்த கையிருப்புக்கள் மாத்திரமே.

076 417 1063


## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 02 . 1943 — மறைவு 12 . 07 . 2021

### யோகலட்சுமி முருகேசு

**( ஓய்வுபெற்ற ஆசிரியை - நாவலர் பாடசாலை )**

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட **யோகலட்சுமி முருகேசு** கடந்த (12.07.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா வேலுப்பிள்ளை (செல்லப்பா ஸ்றோஸ் - காரைநகர்) - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசுவின் (ஓய்வுபெற்ற திறைசேரி உதவிப் பணிப்பாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆனந்தராசா (கனடா), நாகலட்சுமி (கனடா), மங்கையற்கரசி (கனடா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு (கனடா), திலகவதி (கனடா), காலஞ்சென்ற ராஜலட்சுமி (வவுனியா), கதிர்காமநாதன் (கனடா), காலஞ்சென்ற நவரட்ணராசா (லண்டன்), தேவகி (லண்டன்), சிற்சபேசன் (காரைநகர்), சந்திரவதனா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலமுரளி (லண்டன்), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லதா (லண்டன்), சத்தியரூபி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஸ்ணா (லண்டன்), விதுஷன் (லண்டன்), சரிகா (கனடா), சாரா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 7.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/1, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பாலமுரளி (மகன்) 0769476297
பிரபாகரன் (மகன்)
சிற்சபேசன் (சகோதரன்) 0766369256

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வைத்திலிங்கம் இலட்சுமணன் (பனங்கட்டி)

தோற்றம் 28.07.1939 — மறைவு 17.07.2011

பத்தாண்டுகள் சென்றனவோ ஐயா,
பரிதவிக்கின்றோம் பாசம் நிறைந்தவரே
வாழ் நாளெல்லாம் எமக்காகவே
- வாழ்ந்தீரே ஐயா,
உங்கள் அன்புக்கும் அறிவுரைக்கும்
- ஈடு இணை ஏதுமுண்டோ
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகளோடு வாழ்கிறோம் ஐயா!

தந்தை காலடி எமது கோயில்

குடும்பத்தினர்
இலட்சுமணன் (ஹாட்வெயர்)
கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org